372



கதிர் 12 | கரஹு சித்திரை மீ | மணி 4

372
8/1.
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 AUG 1951
MADRAS

சீரைத்தேடின் ஏரைத்தேடு

ஆற்றங்கரையில் மாமுமர சீரிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை—கண்டீர்
பழுதுண்டு மற்றோர் பணிக்கு.

—ஔவையார்.

பயிர்த்தொழில் பண்ணை மாத வெளியீடு

வருட சந்தா ரூ. 3 தனிப்பிரதி அணா 4

பொருளடக்கம்

விஷயம்			பக்கம்
1.	தலையங்கம்	...	1
2.	நீங்கள் கிருஷிகனை என் ஆதரிக்கவேண்டும்?	...	3
3.	உணவு உற்பத்தி (பாடல்)	...	5
4.	ஜனாதிபதி ஸ்ரீ ராஜன் பாபுவின் செய்தி	...	7
5.	பட்டில் வாடி பண்ணை	...	8
6.	உழவும் தொழிலும்	...	17
7	கிராம சுகாதாரம்	...	20
8.	நோயும் மருந்தும்	...	23
9.	பார் பார் என்ன விநோதம் பார்	...	25
10.	ஜப்பானியரிடம் நாம் தெரிந்துகொள்ளவேண்டியது?		26
11.	சாத்தியமா ?	...	27
12.	உங்களுக்கு தெரியுமா ?	...	28
13.	நமது களஞ்சியம்	...	29
14.	நேயர் கடிதங்கள்	...	30
15.	கிருஷிகன் இலவச போட்டி கூபன்	...	—

பக்கம் 9-ல் பிழை 1914—திருத்தம் 1941

கிருஷிகன் நேயர்களுக்கு

கிருஷிகன் பத்திரிகை தபால் இலாகாவில் பதிவாக ஏற்பட்ட தாமதத்தால், சித்திரை இதழ் தாமதமாக வெளியிட நேர்ந்தது. இனிமேல் பிரதி மாதம் 1வ. தவறாமல் கிடைத்துவரும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அடுத்துவரும் இதழ் கிராம பஞ்சாயத்து விசேஷ இதழாக வெளியாவதால் கிராம பஞ்சாயத்துக்கள் தங்கள் இதழ்களுக்கு முன்னதாக பதிவு செய்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இதுவரை சந்தாவை அனுப்பிவைக்காத நேயர்கள் தங்கள் சந்தா பாக்கியை 10—8—51-க்குள் அனுப்பிவைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தங்கள் சந்தாவை அனுப்பி ஆதரித்துவரும் நேயர்களுக்கும் நமது நன்றி.

மானேஜர்
"கிருஷிகன்" காரியாலயம்.

Read and Advertise

IN

THE AGRICULTURAL ECONOMIST

AN INDEPENDANT (RURAL SERVICE) MONTHLY

ON

Economic Affairs

OF

India, Asia and the World

(Published on 15th of each month from Bombay)

Buy

BADHRI'S: Flower and Vegitable seeds
Avenue, Timbers, Flowering Tree Seeds.
Rose, Flower, Avenue, Hedge
Fruit Plants, grafts, etc.

— *Sole Agents for Tamil Nadu* —

PAYIRTHOZIL PANNAI

Hanumanthapuram

Anniyur P. O. ✤ **VILLUPURAM S. I. R.**

ரப்பர் ஸ்டாம்புகள்

தமிழ், இங்கிலீஷ், தெலுங்கு பாஷைகளில் தேவையான ரப்பர் ஸ்டாம்புகள் குறைந்த சார்ஜுகளில் சப்ளை செய்யப்படும்.

RURAL BENEBIT Co., Com. Agents.

ANNIYUR P. O., VILLUPURAM S. I. R.

வாழ்க விவசாயம் !   வளர்க கூட்டுறவு !!

குடிசைத்தொழிலை ஆதரியுங்கள்

விவசாயிகளுக்கு வேண்டிய
கொழு, சங்கிலி, மண்வெட்டி, தகடு, கடப்பாரை, ஏற்றம் - கபிலை சால்கள், குடம், முறம், சட்டி, வண்டிக் கட்டு, அச்சு, கூபர் 11, 25 கலப்பை முதலிய
விவசாய கருவிகளும்
அம்மோனியம் சல்பேட் முதலிய ரசாயன உரங்களும் எங்களிடம் கண்ட்ரோல் விலைக்கு கிடைக்கும்.

விவசாயிகளின்
விளைபொருள்கள் ஈட்டின்பேரில் குறைந்த வட்டிக்கு கடன் கொடுக்கப்படும். குறைந்த கமிஷனில் நல்ல விலைக்கு விற்பனை செய்து கொடுக்கப்படும்.

கூட்டுறவின் பயன்களை அடைந்து விவசாயத்தை விருத்திசெய்து விவசாயிகள் முன்னேறவேண்டும் என்பதுதான் இச்சங்கத்தின் குறிக்கோள்.

விழுப்புரம் கூட்டுறவு விற்பனை சங்கம், லி-ட். No. 1429

சந்தானகோபாலபுரம் :: விழுப்புரம் S. I. Ry.

குறைந்த செலவு !   நிறைந்த குணம் !

"சுதந்திர இந்தியாவில் லக்ஷக்கணக்கான மக்களுக்கு உணவளிக்க .... ஆரோக்கியமான மக்கள் ஆகியவைகளே — நமது லக்ஷியமாக இருக்கவேண்டும்" என்று நமது ஜனாதிபதி ராஜன் பாபு கூறுகிறார்.

இந்திய மக்களுக்கு நோயற்ற ஆரோக்கிய வாழ்வு அளிக்கவல்லது பிரசித்திபெற்ற டாக்டர் ஜே. & ஜே. டிசேன் அவர்களின் அற்புத சக்தியுள்ள மருந்துகளே.

P. M. S. பெட்டி   **அல்போஸாங்**

ஒரு குடும்ப டாக்டர்   ஊட்டமளிக்கும் சிறந்த டானிக்

இன்றே ஒருமுறை பரிக்ஷித்துப் பாருங்கள்.

இதர மருந்துகளும் கிடைக்கும்.

ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்,

கீழ் ஹனுமார்கோவில் தெரு, விழுப்புரம், S. I. R.

THE "AGRICULTURIST"
A Monthly Journal Devoted to Agriculture and Rural Welfare

"கிருஷிகன்"

[பயிர்த்தொழில் முன்னேற்றப் பத்திரிகை]

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்ததுவே"

—ஸ்ரீ பாரதியார்.

கதிர் 12.	கர ௵ சித்திரை ௴	மணி 4

புதுவருஷ வாழ்த்து

"இந்த மங்கள தினத்தில் நான் உனக்கு எதை கொடுக்கட்டும் உன்னிடமும் என்னிடமும் இன்னும் பலரிடமும் இல்லாதது எதுவோ அதையே கொடுக்க முயற்சிக்கிறேன். அந்தப் பொருள் கிடைத்துவிடும்பொழுது எல்லாம் கிடைத்து விட்டதாக கொள்ளலாம். சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும் என்ற பழமொழிப்படி என்னால் என்னதான் கொடுக்க முடியும்; ஆனால் நாம் அனைவரும் சேர்ந்து ஆண்டவனிடம் கொடுக்கும்படி வேண்டுவோம்."

"புதிய வருஷம் உனக்கு நன்மை தருவதாக உன் உடல் வலிவும், மனோபலமும், ஆத்மீக சக்தியும், நாளுக்குநாள் வளர்ச்சி பெற்று, அன்புடன் அவைகள் அனைத்தையும் பாரதமாதாவின்

சரணங்களில் அர்ப்பணம் செய்யவேண்டுமென்பதே என் ஆசையும் ஆசியும்."

*புத்தாண்டு, ஸம்வத் 1974. *"பாபுவின் ஆசிகள்".

புதிய ஆண்டு உதயம்

நமது நாட்டில் யுத்தப், வெள்ளப், பூகம்பம் உணவு, உடைப் பஞ்சம் முதலிய கஷ்டங்களுக்கிடையே விக்ருதி ஆண்டு 12 மாதங்களும் நேற்றுடன் ஓடி மறைந்து நாடெங்கும் குளிர்ந்த மழை பெய்து சந்தோஷ சுபக்குறியுடன் கர ஆண்டு இன்று உதயமாகியுள்ளது.

சென்ற ஆண்டில் பட்ட துன்பங்களெல்லாம் மறைந்து நல்ல மழைபெய்து நாடு செழித்து உணவு, உடை பஞ்சங்கள் ஒழிந்து, ஒற்றுமை வளர்ந்து எல்லாரும் இன்பமாக வாழ அருளுமாறு (அமரர் மகாத்மாஜியின் ஆசியுடன்) எல்லாம்வல்ல இறைவனை ஒருமனதுடன் பிரார்த்திப்போம்.

கிருஷிகன் முதல்வெற்றி

சென்ற இதழில் 47—48-ல் கொடுத்த கிணறு மானியத் தகையின் வசூலை நிறுத்தி மீண்டும் பரிசீலனை செய்வது அவசியம் என்று குறிப்பிட்டிருந்தோம். விவசாயிகளின் தற்கால நிலைமையையும், அவசியத்தையும் உணர்ந்து சர்க்கார் வசூலை நிறுத்தினதைத் துள்ளதற்காக கிருஷிகர் சார்பாக நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம்.

மேலும் நாம் குறிப்பிட்டிருந்தபடி ஒரு நேயர் செய்து கொண்ட அப்பீலின்மேல் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விசாரணை செய்து, வசூல் உத்திரவை ரத்துசெய்து, மானியத்துகையை வஜா அளித்துவிட சிபாரிசு செய்திருப்பதாக அறிகிறோம். இது சம்பந்தமான கடிதம் பிரிதோரிடத்தில் பிரசுரித்துள்ளோம்.

இதர விவசாயிகளும், கிணர் வேலையை உடனே பூர்த்தி செய்து இவ்வித அனுகூலத்தை பயன்படுத்திக்கொள்வதுடன், அதிகம் உணவு உற்பத்திசெய்து உணவுப்பஞ்சத்தை ஒழிப்பார்கள் என்று நம்புகிறோம்.

---

*மகாத்மாஜி தம் புதல்வர் மகன்லாலுக்கு எழுதிய கடிதத்தின் பகுதிகள். "கதர்மலர்" மார்ச்சு இதழிலிருந்து எடுக்கப்பட்டது.

விவசாயிகளே!

நீங்கள் கிருஷிகனை ஏன் ஆதரிக்கவேண்டும்?

விவசாயம்தான் ஒரு நாட்டின் கைத்தொழில், வியாபாரம், பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையாகும். விவசாயம் விருத்தி செய்யப் பட்டால், வியாபாரம் கைத்தொழில் முதலியன தானே விருத்தியாகும். இன்று பிரிட்டன், அமெரிக்கா, ரஷியாபோன்ற நாடுகள் அடைந்துள்ள முன்னேற்றத்தின் ரகசியமும் இதுதான். எனவே நம் இந்தியாவின் சுபிட்ச வாழ்வுக்கு பொருளாதாரம் முன்னேறவேண்டும்; பொருளாதார முன்னேற்றத்திற்கு வியாபாரம் விருத்தியடையவேண்டும்; வியாபார விருத்திக்கு கைத்தொழில்கள் வளரவேண்டும்; கைத்தொழில்கள் வளர்ச்சிக்கு விவசாய (மூலம்பொருள்கள்) உற்பத்தி பெருகவேண்டும்; விவசாய உற்பத்திக்கு கிருஷிகர் நிலை உயரவேண்டும். இவ்விதம் கிருஷிகர்நிலை உயர்ந்து விவசாய உற்பத்தி பெருகினால்தான் இந்தியாவின் பற்றாக்குறை தீர்ந்து கைத்தொழில்கள் வளர்ச்சியடைந்து மக்கள் சுபிட்ச வாழ்க்கைபடைய முடியும்.

கிருஷிகன் லக்ஷியமும் இதுதான். சிதறிக்கிடக்கும் இயற்கை வசதிகள், சக்திகள், சாதனங்கள் இவைகளை ஐக்கியப்படுத்தி விவசாயிகளுக்கு பயன்படுத்த நீண்டகாலமாக சேவைசெய்து வந்துள்ளது. அடிமை இந்தியாவில், விவசாயிகளின் சீர்கெட்ட நிலைமையாலும், பொருளாதார மந்தத்தாலும் தடைபட்டு, 20 ஆண்டுகளுக்கு பிறகு குடியரசு இந்தியாவில் கிருஷிகர்களுக்கு சேவைசெய்ய 12-வது மலராக 2-வது குடியாசுதினம் முதல் வெளியாகி வருகிறது.

கிருஷிகனில் விவசாயி, விவசாயம், கைத்தொழில், கூட்டுறவு, சுகாதாரம், கால்நடை முதலிய கிராம முன்னேற்ற சம்பந்தமான கட்டுரைகள், கவிதை, நாடகங்கள், செய்திகள், 50 ரூபாய் [விவசாய கருவிகளின்) பரிசு இலவச போட்டிக்கூபன் போன்ற பல அம்சங்கள் வெளியாகும்.

கிருஷிகனை நீங்கள் ஆதரிப்பதின் மூலம், தமிழ்நாட்டு விவசாயிகளுடன் தொடர்பும் ஐக்கியமும் வளர்ந்து முன்னேறுவதுடன் நாட்டின் விவசாயம், வியாபாரம், பொருளாதாரம் முன்னேற உற்பத்தியைப் பெருக்கி, சுதந்திர இந்தியா சுபிட்ச நிலமையை அடையச்செய்தவர்களாவீர்கள்.

சிந்தித்துப் பாருங்கள்

நேயர்களே !

நீங்கள் ஒரு விவசாயியா ?

அதிக உணவு உற்பத்திப் போர்முனையில் ஒரு அங்கத்தினரா ?

உங்கள் கிராமத்தைச்சுற்றி 2 மைல் வட்டாரத்தில் உணவுத் தட்டுப்பாடு இருக்கிறதா? அப்படியானல் உணவுத் தட்டுப்பாடு நீங்க நீங்கள் என்னென்ன முயற்சிகள் செய்துவருகிறீர்கள் ?

உங்களுக்கு அதிக உணவு உற்பத்தி முயற்சியில் ஏதாவது இடைஞ்சல்கள் இருக்கிறதா? எவை?

நீங்கள்

"கிருஷிகன்" பத்திரிகையின் சந்தாதாரரா ? அப்படியானல் சந்தாவை அனுப்பிவிட்டீர்களா ?

"கிருஷிகன்" விவசாயிகளுக்கு உபயோகமுள்ளதென்று கருதுகிறீர்களா ?

"கிருஷிகன்" வளர்ச்சிக்கு ஒரு புதிய சந்தாதாரரையாவது சேர்த்துக் கொடுத்தீர்களா ?

உங்களுக்கு

'கிருஷிகன்' பத்திரிகை பிரதிமாதமும் தவராமல் கிடைத்து வருகிறதா ?

'கிருஷிகனில்' வரும் விஷயங்கள் அவசியமுள்ளதாக தோன்றுகிறதா ?

'கிருஷிகனு'டைய அம்சங்களில் ஏதாவது மாறுதல் செய்வதின் மூலம் இன்னும் நல்ல சேவை செய்யக் கூடுமென்று தோன்றுகிறதா ?

பதில் கூறுங்கள்.

விவசாய வளர்ச்சியே எங்கள் மகிழ்ச்சி !

உணவு உற்பத்தி

(தோழனுக்கறிவுறுத்துதல்)

ஸ்ரீ C. தங்கசாமி அய்யர், இலங்கை

1. நல்ல வயலின் கண்ணே
நெல்லை விதைத்து விட்டால்
எல்லையிலா இன்பமடா—தோழா
என்றும் மறவோமடா.

2. நாட்டினில் வாழும் மக்கள்
கூட்டுற வைக்கியத்தில்
வாட்டமில்லாது நெல்லைத்—தோழ
வளர்த்திட வேண்டுமடா.

3. வேற்று தேசத்தை நம்பிச்
சோற்றுக் கலைந்திடாமல்
நாற்றினை நட்டு நெல்லைத்—தோழா
நன்று வளர்ப்போமடா.

4. ஊணுக்கா யன்னியரிடம்
ஓடித் திரிவதெல்லாம்
வீணர்க் குறியதடா—தோழா
மேன்மையு மில்லையடா.

5. கையினுல் குத்தி நெல்லை
நொய்ய அரிசி ஆக்கித்
துய்ய சோறுண்டிடுவோம்—தோழா
துயரம் தவிர்ப்போமடா.

6. நாட்டில் வேளாண்மை தன்னை
நாட்டி விட்டால் வறுமை
ஓட்டம் எடுக்குமடா—தோழா
உணர்ந்து நீ கொள்வாயடா.

7. காட்டைத் திருத்தி யங்கே
நாட்டு நெல் விளைத்திட்டால்

கண்கவர் காட்சியடா—தோழா
கண்ணிய மாகுமடா.

8. பண்டை நன்னளிலே
அண்டை அயலிலுள்ளோர்
அண்டிப் பிழைத்தாரடா—தோழா
அள்ளிக் கொடுத்தோமடா.

9. நாட்டில் வயல்களுண்டு
நதிகள் குளங்களுண்டு
வாட்ட மில்லாது நெல்லைத்—தோழா
வளர்த்து வருவோமடா.

10. அரிசி அரிசி யென்று
அவதிப் படுவதினிச்
சரியல்ல வென்று பறை—தோழா
சாற்றித் திரிந்திடடா.

11. காட்டைத் திருத்தி யெங்கள்
நாட்டிற்கமத் தொழிலை
கூட்டி விருத்தி செய்வோம்—தோழா
காட்டும் பயனிதுவே.

12. பச்சை நிற வயலை
இச்சை யுடனே கண்டால்
உச்சி குளிருமடா—தோழா
உள்ளம் மகிழுமடா.

13. கன்னற் பயிர்கள் போன்ற
செந்நெற் குலங்களெல்லாம்
பொன்னின் நிறக்கதிர்கள்—தோழா
முன்னம் அளித்திடுமே.

14. நெல்லின் விளைவதொன்றே
யல்லால் நமக்குவேறு
புல்லும் துணையுமுண்டோ—தோழா
சொல்லற் கரியதடா.

இந்தியக் குடியரசு ஜனாதிபதி
ஸ்ரீ ராஜேந்திர பிரஸாதின் செய்தி.

★

நம் நாட்டின் உணவுப்பஞ்சம் தீர - - மகசூலைப் பெருக்குவதே கடமை.

ஒவ்வொரு ஏக்கர் நிலத்தின் மகசூலைப் பெருக்குவதுதான் இந்திய விவசாயத்தின் முன்புள்ள மிக முக்கியமான பிரச்னை

யாகும். நமது நாட்டைப் பஞ்சம் சதா பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. இப் போர்ப்பட்ட சமயத்தில் பட்டினி கிடக்கும் லட்சக் கணக்கான மக்களுக்கு உணவு அளித்து உதவ உற்பத்தியை பெருக்க தம்மாலானவரை பாடுபடவேண்டியது ஒவ்வொரு விவசாயியின் கடமையாகும். ஒவ்வொரு விவசாயியும் ஒரு ஏக்கருக்கு ஒரு மணங்கு அதிகம் உற்பத்தி செய்தால் போதும். அப்படிச் செய்தால் நமக்கு வேண்டிய உணவுப்பொருள்கள் நம் தேசத்திலிருந்தே நமக்கு கிடைத்துவிடும். வளமான பூமி, செழுமையான பயிர், வலிமையுள்ள கால்நடைகள், ஆரோக்கியமான மக்கள் ஆகியவைகளே நமது லக்ஷியமாக இருக்கவேண்டும். ஆனல் உண்மையான பரிகாரம் மக்கள் முயற்சியில்தான் இருக்கிறது. மக்கள் கட்டுப்பாடுடன் எதிர் நோக்கியுள்ள இம் மாபெரும் பணியில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

—[செ. செ.]

உணவு உற்பத்தியைப் பெருக்க

நல்ல பண்ணை முறைகள்

இந்தப் பகுதியில் சிறந்த "பயிர்த்தொழில்" முறைகள் நாட்டிலெங்கும் பரவ பிரசுரிக்கப்படும். நமது வாசகர்கள் தாங்கள் கையாளும் சிறந்த பண்ணை முறைகளையும் அதன் பயனையும் சுருக்கமாக எழுதி அனுப்பலாம்.

நம்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் எங்கெல்லாம் உற்பத்திச் செய்ய முடியுமோ அங்கெல்லாம் அதிக உணவு உற்பத்திச்செய்ய நம்முடைய பூமியை (வயல்களை) புத்திசாலித்தனமாக சரியான முறையில் பயன்படுத்திக்கொண்டால், நமமை வதைக்கும் உணவு பஞ்சத்தை தீர்த்துவிடலாம் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. —மகாத்மாஜி

விவசாயிகளின் அனுபவங்கள்

கிராமத்துக்கு ஒரு "பண்ணைத்திட்டம்" வேண்டும்

நம் நாட்டின் உணவுத்தேவை நாளுக்குநாள் பெருகி உற்பத்தி குறைந்து வருகிறது ஆதலால் இறக்குமதி அதிகமாகி பொருளாதார வெளியேற்றம் அதிகரித்து வருகிறது. இந்த நிலமை மாறுவிட்டால் வருங்காலத்தில் இன்னும் பொருளாதார மந்தத்தால் இந்தியா பாதிக்கப்படுமென்பது நிச்சயம். ஆகவே நிலமை மாறி சுயதேவை பூர்த்தியடைந்து பொருளாதார நிலை உயர உற்பத்தி பெருக வேண்டும். இதற்கு நம் கிருஷிகர் சிறந்த முறைகளில் விவசாயத்தை செய்து உற்பத்தியை பெருக்கவேண்டும். இப்படி நல்ல விதை, உரம், கருவிகளைக் கொண்டு சிறந்த முறைகளில் விவசாயம் செய்யும் வழிகளை சாதாரண விவசாயிகளும் தெரிந்துகொள்ளும் வகையில் அவர்களுடைய நிலத்திலேயே நேரில் செய்து காண்பிக்க கிராமத்துக்கு ஒரு பண்ணைத்திட்டம் வேண்டும்.

சாதாரண மனிதர் முதல் பெரிய தலைவர் வரையில் எல்லோரும் "கிராமத்துக்கு போங்கள்" என்று சொல்லிக்கொண்டு இருப்பதைத் தவிர உண்மையில் கிராமத்துக்குச் சென்று, கிராமங்கள், விவசாயம், விவசாயி முன்னேற உழைப்பவர் எவரும் கிடையாது. கூலிக்கார குப்பன் முதல் கோடீஸ்வர கோபால்தாஸ் வரை (வக்கீல், டாக்டர், வியாபாரி, மாணவர் வேலையிலிருந்து ஒய்வு பெற்றவர்கள், முதலாளி, தொழிலாளி உள்பட எல்லாரும் நகரத்தை அடைந்து தேவையை அதிகரிக்கச் செய்து வருகிறார்களே தவிர, உற்பத்திக்கு உதவிசெய்வதாக காணோம். அப்படி 100-க்கு ஒருவராவது உழைக்க முன் வருவாராகில் நம் கிராமங்

கள் செழித்து உற்பத்தி பெருகி பொருளாதாரம் உயர்ந்து நாடும் சுபீக்ஷம் அடையும் என்பது திண்ணம்.

இத்துறையில் டாக்டர் படீல் செய்துவரும் சேவை போற்ற தக்கதாகும். இவர் மேல் நாட்டில் பயிற்சி பெற்றவர். சர்க்காரில் பெரிய உத்தியோகங்கள் பெற அருகதையுள்ளவர். அப்படியிருந்தும் உத்தியோகத்தை தேடியலையாமல் நாட்டுப்பற்று கொண்டு கிராம சேவை செய்ய பண்ணைத்தொழிலை மேற்கொண்டார். அவருடைய (பட்டீல்வாடி) பண்ணையைப்பற்றிய கட்டுரையை கீழே பிரசுரித்திருக்கிறோம். இதிலிருந்து அந்த வட்டாரத்திலேயே சிறந்த முறையில் பண்ணையை நடத்தி வருகிறார் என்பதற்கு அத்தாக்ஷி அவரின் சேவைதானாகும்.

நமது மாகாணத்தில் விவசாயக் கல்லூரி உள்ள கோவை ஜில்லாவில் 1914ம் ஆண்டில் வினியோகம் செய்துள்ள வித்தின் அளவு 44,000 ராத்தல்கள். அதே ஆண்டில் டாக்டர் படீல் வினியோகம் செய்துள்ள வித்துக்களின் அளவு 88,600 ராத்தல்கள் சர்க்கார் இலாகா ஒரு ஜில்லாவில் செய்துள்ளதைவிட ஒரு தனி நபர் அதிகம் சேவை செய்துளளார் என்பது இதனால் ஏற்படுகிறதல்லவா? இவ்விதம் ஒவ்வொரு ஜில்லா, தாலூகா, கிராமங்களிலுமுள்ள பெரிய விவசாயிகள், முதலாளிகள் இவர்கள், விவசாய இலாகாவின் உதவிகொண்டு உற்பத்தியை பெருக்க ஆரம்பித்தால் நமது நாட்டில் உணவுப்பஞ்சம் ஏற்படுமா? —ப-ர்.

பட்டீல் வாடி பண்ணை

டாக்டர் ஸ்ரீ விஸ்ராம் எச். பட்டீல் இப்பண்ணையின் சொந்தக்காரர் ஆனதால் இதற்கு பட்டீல்வாடி பண்ணை என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. இது சாத்பூரா மலைத்தொடர்ச்சியின் அடிவாரத்தில் ஷாஹதா—தாடேகான் ரஸ்தாவில், ஷாஹதாவிலிருந்து 12 மைல் தூரத்தில் இருக்கிறது. இந்த பண்ணையின் மொத்த விஸ்தீரணம் சுமார் 500 ஏக்கர்கள். வருடந்தோறும் இப்பண்ணையில் ஆயிரக்கணக்கான மணங்கு தானிய வகைகளும் பழவகைகளும் உற்பத்தி செய்யப்படுவதுடன், உயர்ந்த ரீமார் ஜாதி கால் நடைகளும் விர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

இன்று அழகுமிக்க பண்ணையாக, பார்ப்பவர்கள் மனதை கவரும் இந்த இடம், சில வருடங்களுக்குமுன், மரம், செடி, புதர்கஅடர்ந்து வாட்சியான சர்க்கார் தரிசாக இருந்ததென்றால் ஆச்சரியமாகத் தோன்றும்.

பண்ணையின் தோற்றம்.

டாக்டர் விச்ராம் பட்டீல் சிறுவயதிலிருந்தே நவீன முறையில் விவசாயம் செய்யவும், நல்ல சிறந்த முறைகளினால் பயிர்த்தொழிலை லாபகரமாக

நடத்தலாம் என்பதுடன், கால்நடை வளர்ப்பு முதலியவைகளும் லாபகரமாக செய்யலாம் என்பதை மற்றவர்களும் புரிந்துகொள்ளும்படி செய்துக் காட்ட வேண்டுமென்னும் அவாவுடையவராயிருந்தார். பம்பாய் ராஜ்யத்தில் கிழக்கு காண்டேஷ் ஜில்லாவில் சாஹர்த்தி என்ற இடத்தில், பட்டிதார் வம்சத்தைச் சேர்ந்த டாக்டர் படீல் சொந்தப்பண்ணையும் நடத்தி கிராம சேவை செய்ய நீண்டகாலமாகவே உத்தேசித்திருந்தவராதலால், அந்த நோக்கம் வெற்றிபெற சிறந்த விவசாய முறைகளிலும், கல்வியிலும் பயிற்சியடைய விரும்பினர். அதற்காகவே அவர் அமெரிக்காவில் (U. S. A.) Ph. D. பட்டத்திற்காக படித்துக்கொண்டிருக்கும்போதே ஒரிகான் விவசாயக் கலாசாலையிலும், ஐஓவா ராஜ்ய கல்லூரியிலும் சிறந்த விவசாய முறைகள், கால்நடை வளர்ப்பு சம்பந்தமாக தெரிந்துகொள்ளவேண்டியவைகளையெல்லாம் கற்று, பயிற்சியும் பெற்ருர். கலாசாலை வாழ்க்கை முடிந்தது தாய் நாட்டுக்கு திரும்பியதும், சர்க்காரில் உயர்தர உத்தியோகம்பெற வசதிகளிருந்தும்கூட உத்தியோகத்தை நாடி அலையாமல், கிராமத்திலேயே ஒரு பண்ணை ஏற்படுத்தி சிறந்த முறையில் நடத்தி கிராமசேவை செய்துக்கொண்டு சுதந்திரமாக வாழ விரும்பினர். அவருடைய நீண்டகால அவாவும் அதுதானே? இதன்படியே சிறந்த ஜாதி கால்நடைகள் விருத்திசெய்யவும், பொறுக்கு விதைகளின் உற்பத்தி பெருக்கவும், சுற்றுப்புற விவசாயிகளுக்கு ஒருமாதிரிப்பண்ணையாக விளங்கவும், நூதன முறையில் இப்பண்ணையை நடத்த ஒப்புக்கொண்டு, சர்க்காரிடமிருந்து இந்த 500 ஏக்கர் தரிசு பூமியை பெற்றுக்கொண்டார்.

பண்ணையின் சீர்திருத்தம்.

இந்த இடம் மரங்கள், செடிகள், முட்புதர்கள், புல்பூண்டுகளடர்ந்த இடமாக இருந்ததால் சீர்திருத்துவது அவ்வளவு சுலபமாக இல்லை. இவைகளை வெட்டி அப்புறப்படுத்தி, நிலங்களை துப்புறவுசெய்து மேடு பள்ளங்களைத் திருத்தி வரப்புக்கள் அமைத்து, மழை சுழிவுநீர் வடிகால் வாய்க்கால்களும் வெட்டி, நீர்ப்பாசன வசதிகளை விருத்தி செய்து, மண் அரிப்பைத் தடுத்து வளப்படுத்த கோரை முதலிய புல் வகைகளை வரப்புகளிலும் வாய்க்கால்கரைகளிலும் நட்டு சீர்திருத்தப்பட்டது. பலவிதமான இரும்பு கலப்பைகள், கருவிகளைக்கொண்டு உழுது, நிலங்களை சமனுக்கி, 1934ல் 96 ஏக்கர் விஸ்தீரணத்தில் சாகுபடி ஆரம்பிக்கப்பட்ட இப்பண்ணை 1944ல் 500 ஏக்கர் விஸ்தீரணமாக வளர்ச்சிபெற்றது. இதுவரை இப்பண்ணையின் அபிவிருத்திக்காக சுமார் ரூ. 88,000 வரை செலவு செய்யப்பட்டிருக்கிறது.

நிலங்களை சீர்திருத்தம் செய்யுமுன் மரம், செடி, புதர்களடர்ந்துள்ள ஒரு பகுதி. "படுநிலத்திலிருந்து பண்ணை நிலமாக மாற்றும் காட்சி!"

ஆரம்பிக்கும்போது, பாதி விஸ்தீரணத்தில் உணவு தானியமும் பாதியில் பணபபயிர்களும் பயிரிடுவதாக திட்டமிடப்பட்டிருந்தாலும், நாட்டின் உணவு பஞ்சத்தை உத்தேசித்து உயர்ந்தரக கோதுமை, சோளம், கம்பு, நெல் இவைகளின் பொறுக்கு விதைகளை அதிகமாகவும் பருத்தி, மணிலா போன்றவைகளை குறைத்தும் சாகுபடி செய்யவேண்டியிருந்தது. மேலும் மழை, சீதோஷ்ணம, மண்வளம் இவைகளையனுசரித்து பயிர் முறைகளையும் மாற்றி அமைக்கவேண்டியிருந்தது.

இதன்படி 1949–50ல் 374 ஏகரில் உணவு தானியங்களும் பயிர் வகைகளும் விளைவிக்கப்பட்டது. 75 ஏகரில் மட்டும் பணப்பயிர்களான பருத்தி, மணிலாபோன்றவைகள் பயிரிடப்பட்டன. 44 ஏக்கர் கால்நடைகளின் மேய்ச்சல் தரையாக ஒதுக்கபபட்டிருந்தது. 9 ஏக்கரில் பழ மரங்களும் பயிரிடப்பட்டிருந்தது.

இப்பண்ணையின் பழத்தோட்டம் 9 ஏக்கர் விஸ்தீரணமுள்ளது. ஜல வசதிக் குறைவால் இதில் பலவகை மா மரங்கள், மோசும்பி, சாந்த்ரா, ஆரஞ்சு வகை பழ மரங்கள் நட்டு உற்பத்தி செய்யப்பட்டன. இந்த தாலூகாவிலேயே இத்துறையில் செய்யப்பட்ட முதல் முயற்சியாகும்.



பண்ணையின் பழத்தோட்டம் தூரத்தில் தெரிகிறது.

இப்பட்டீல்வாடி பண்ணையில் பெரும் பகுதி சர்க்கார் விவசாய இலாகாவினுல் பரிசோதிக்கப்பட்ட பொருக்கு விதைகள் தான் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. இந்த வட்டாரத்திலேயே, விவசாய இலாகாவின் பொருக்கு விதைகளையும், அப்பிரதேசத்திற்கு ஏற்ற விதைகளையும் பரீக்ஷை செய்து பார்ப்பதில் முன்னணியில் நிற்பவர் டாக்டர் படீல்தான். அவர் இந்தப்படி பயிர் செய்துள்ளவைகளில் முக்கியமானது ஸ்பானிஷ் (Peenut) கடலே, 197–3 பருத்தி, அகோலா கம்பு, கொதாலி வசுமதிநெல், தாதரைச் சேர்ந்த நியாலா, மொடியாா கோதுமை தினுசுகளாகும். டாக்டர் படீல் அடுத்த வருடத்திற்கென உயர்ந்தரக வித்து உற்பத்தி செய்துக்கொள்வது வழக்கமானுலும் சர்க்கார் பண்ணையிலுள்ள உயர்ந்தரக விதைகளையும் வாங்கி உபயோகிப்பதில் ஆர்வமுடையவர். மேலும் இவர் தன் பண்ணையில் உயர்ந்தரக பொருக்கு விதைகளுடன் நாட்டு விதைகளையும் பயிரிட்டு லாப நஷ்டங்களைப்பற்றி பரிசீலனை செய்வதும் வழக்கம். இவ்விதம் அப்பிரதேசத்திற்கென உற்பத்தி செய்யப்படும் நல்ல விதைகள் விவசாய இலாகா மூலமும், தாலூகா விவசாயிகள் சங்கம் மூலமும் இதர விவசாயிகளுக்கு வினியோகிக்கப்பட்டு வருகிறது. 1949–50ம் ஆண்டில் சுமார் 50,000

ராத்தல் உயர்ந்தாக விதைகள் விநியோகிக்கப்பட்டது. இதல்லாமல் பண்ணையிலேயே 15-மணங்கு நெல்லும் 13-மணங்கு கோதுமை விதையும் விற்கப்பட்டுள்ளது.

உரங்கள் சேகரிப்பு.

"எரினும் எருவிடல் நன்று" என்னும் மூதுரைப்படி, நல்ல விவசாயத்திற்கு, ஏராளமான சிறந்த உரம் அவசியமென்பதை நன்கு உணர்ந்தவர் டாக்டர் படீல். இத்துறையில் அவரின் ஊக்கமும் அக்கரையும் மெச்சத்தக்கதாகும். இப்பண்ணையிலுள்ள கால்நடைகளிலிருந்து கிடைக்கும் கழிவுகளிலிருந்து வருடம் 1-க்கும் சுமார் 1,500 வண்டி தொழு உரம் இதற்கென கட்டப்பட்டுள்ள குழிகளில் கொண்டு போய் சேர்க்கப்படுகிறது.



தொழுவத்திலிருந்து கழிவை 'கம்போஸ்டு' உரக்குழிகளுக்கு வண்டிகள் கொண்டு சேர்க்கின்றன.

மேலும் விவசாயத்தில் **"கம்போஸ்ட் உரத்தின்"** முக்கியத்தையும் அவசியத்தையும் தெரிந்த இவர் சென்ற ஆண்டில், 8 கம்போஸ்டு குழியிலிருந்து ஆரம்பித்து, இந்த ஆண்டில் 80 கம்போஸ்டு உரக்குழிகள் வரை தயார் செய்துள்ளார். இவ்விதம் தயாரிக்கப்படும் ஏராளமான தொழு உரம், கம்போஸ்டுஉரம் இவைகளுடன் கடலை புண்ணக்கு, அம்மோனியா, சல்பேட் போன்ற செயற்கை உரங்களும் தேவையான அளவுகள் பயிர்களுக்கு உபயோகிக்கப்பட்டு வருகிறது.

பண்ணையில் கழிவுப் பொருள்களும்கூட வீணுக்கப்படாமல் இக்குழிகளில் சிறந்த கம்போஸ்டு உரங்களாக தயாரிக்கப்படுகின்றன.

கால்நடை வளர்ப்பு.

இப்பண்ணையின் கால்நடைகள் வளர்ப்பு இரண்டுவித நோக்கங் கொண்டது. முதலாவதாக கடும் வேலைகளையும் தாங்கக்கூடியதும், சுறுசுறுப்பாக வேலை செய்யக்கூடியதுமான எருதுகளை விர்த்தி செய்தல்; இரண்டாவதாக நல்ல பால் தரும் உயர்ந்தரக பசு இனங்களை உற்பத்தி செய்தலுமாகும். இவ் விஷயத்தில் அதிக கவனம் செலுத்தி, எவ்வித கலப்பும் நோயும் ஏற்படாத வகையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. கால்நடை வளர்ப்பில் கவனிக்கப்பட வேண்டியமிகமுக்கிய அம்சங்கள் இவைகள்தான்.



இப் பண்ணையில் விருத்தி செய்யப்படும் நீமார் ஜாதி உயர்ந்த பொலிக்காளை.

இந்தப் பண்ணையின் துடக்கத்தில் கிள்ளார், காங்ரேஜ் ஜாதி மாடுகள் வளர்க்கப்பட்டு வந்தது. பிற்பாடு சர்க்கார் கால்நடை இலாகாவினர் யோசனையின் பேரில் இது கைவிடப்பட்டது. இவைகளுக்குப்பதிலாக உயர்ந்த நீமார் ஜாதிமாடுகள் விருத்தியாக்கப்பட்டு வருகிறது. இச்சாதிமாடுகளின் கன்றுகள் முதன் முதலில் வெளியிலிருந்து தருவிக்கப்பட்டது. இப்போது இச்சாதி கால்நடைகள் கலப்பற்ற உயர்ந்த சுத்தமான ஜாதிகளாக வளர்க்கப்பட்டு வருவதுடன் அக்கம் பக்கத்திலுள்ள குடியானவர்களுக்கும் வெளி ஜில்லாவிலுள்ளவர்களுக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இத்துறையில் கால்நடை இலாகாவின் யோசனையும் உதவியும் மிகவும் பயனளித்துள்ளது.

பண்ணையில் பால் கறக்கும் நேரம் பசுமாடுகள் கட்டப்பட்டுள்ள தொழுவத்தின் ஒரு பகுதி.

இப்போது இப்பண்ணையில் 2 நீமார் ஜாதி பொலிக்காளைகள், 51 எருது மாடுகள், 46 பசுமாடுகள், 35 காளைகள், 37 கிடாரிகள், ஒரு வயதுக்குட்பட்ட 27 கன்றுக்குட்டிகளும் இருக்கின்றன. கால்நடை வளர்ப்புக்காக தொழுவம், கட்டுத்தரை, பச்சைத்தீவன (Silage) குழிகள் தீவனக் கிடங்குகள், எருக்குழிகள் இவைகளுக்காக சுமார் ரு. 47,000 வரை செலவிடப்பட்டிருக்கிறது. (பண்ணையின் ஆரம்ப காலத்தில் வாங்கிய கால்நடைகளின் கிரயமும் இதில் அடங்கியதாகும்).



தொழுவத்தின் மற்றொரு பகுதி. இம்மாதிரி உயர்ந்த ஜாதி கால்நடைகளின் கூட்டத்தையும்; தொழுவின் கட்டிடமும் காணலாம்.

இப்பண்ணையில் விருத்தி செய்யப்பட்ட உயர்ந்த ஜாதி நிமாரி எருதுகள் சுமார் 50க்குமேல் சுற்றுப்புற விவசாயிகளுக்கு விற்கப்பட்டுள்ளது. நிமாரி ஜாதி பசுமாடுகளும் அக்கம்பக்கத்திலுள்ள விவசாயிகளுக்கு அநேகம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதனால் இந்த உயர்ந்த நிமாரி ஜாதி கால்நடைகள் பல கிராமங்களிலும் விருத்தி அடைந்துள்ளது. தவிர கால்நடை இலாகாவின் ஆலோசனையின்படியும், உதவியுடனும் நிமாரி கோ சேவா சங்கம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டு இச்சாதி கால்நடைகளின் அபிவிருத்திக்கு பாடுபட்டு வருகிறது.

நிமார் ஜாதி எருது ஜோடி உறுதியுடனும் சுறுசுறுப்புடனும் வேலை செய்வதில் இவைகள் பெயர் போனவை.

பண்ணையாட்களின் நலம்.

தம் பண்ணையின் அபிவிருத்திக்கும் வெற்றிக்கும் பண்ணையாட்களின் சந்தோஷமும் திருப்தியும் நிறைந்த நல்ல வாழ்க்கை தரம்தான் மூல காரணம் என்பதை உணர்ந்துள்ள டாக்டர் பட்டீல் தன்னுடைய பண்ணையாட்கள் வசிப்பதற்கென நல்ல முறையில் 32 வீடுகள் கட்டிக் கொடுத்துள்ளார். அங்கு பண்ணையாட்களின் குழந்தைகள் விளையாட போதிய இடவசதியும், எப்போதும் சுத்தமும் ஆரோக்கியமும் ஏற்படும்படி காற்றேட்டம்வெளிச்சம் இவைகளும் கவனிக்கப்பட்டுள்ளது. தன் பண்ணையாட்களின் நலனுக்காகவும் கட்டிடங்கள் கட்டுவதற்காகவும் சுமார் ரூ. 15000 வரையில் செலவு செய்திருக்கிறார்.



பண்ணையாட்களின் வீடுகள்
காற்றேட்டம், வெளிச்சம், ஆரோக்கியமுமிருக்கும் படியான கட்டிடங்கள் பல பண்ணைத் தொழிலாளர் களுக்காக கட்டப்பட்டிருக்கின்றன.

சிறந்த உதாரணம்.

டாக்டரின் பண்ணையாட்களும் சுற்றுப்புற விவசாயிகளும் Bhils வகுப்பைச் சேர்ந்தவர்களாகும். டை வகுப்பாரிடையே புதிய முறைகளையும், பொருக்கு விதைகளையும் பரவச்செய்யும் டாக்டரின் திட்டம் போற்றத்தக்கதாகும். அதாவது அவர் தன்னிடமுள்ள உயர்ந்த பொருக்கு விதைகளை, விவசாயிகளுக்கு கொடுத்து அவர்களிடமுள்ள தானியத்தை மாற்றிக்கொள்வதேயாகும். இந்தமாதிரி 1941-ம் ஆண்டில் மட்டும் சுமார் 88600 ராத்தல் * (710 மூட்டைகள்) விதையை விநியோகித்திருக்கிறார். டை வருடத்தில் இதற்காக டை ஷாஹாதா வட்டாரத்தில் மட்டும் 5 விதை கிடங்குகள் ஏற்படுத்தப்பட்டன.

படித்துப் பட்டம்பெற்ற ஒருவர் உத்தியோகத்தையே நம்பி யிருக்காமல் பயிர்த்தொழிலை எப்படி சிறந்த முறையில் (சாதாரண விவசாயிகளை விட)

---

*1941-ம் ஆண்டில் தலைமை விவசாய கல்லூரி உள்ள கோவை ஜில்லா பூராவிலும் விநியோகிக்கப்பட்ட (விவசாய இலாகாவினுல்) பொறுக்கு விதைகளின் அளவு 44,000 ராத்தல்களாகும்.

நடத்தலாம் என்பதை டாக்டர் பட்டீல் நிதர்சனமாக காட்டியுள்ளார் மேலும் அவர் இப் பயிர்த்தொழிலிலே ஈடுபட்டிருப்பது மட்டுமல்லாமல், விவசாயிகள், கிராமங்கள் இவைகளின் முன்னேற்றத்திற்கான டஜனுக்கு மேற்பட்ட பல ஸ்தாபனங்களிலும் ஈடுபட்டு உழைத்துவருகிறார். ஷை இந்த நல்ல காரணங்களுக்காக சிறிய, பெரிய விவசாயிகள் பலரும் இவரிடம் தினசரி வந்து, விவசாயம், கால்நடை வளர்ப்பு, வாழ்க்கை நலம் ஆகியவை சம்பந்தமாக ஆலோசனை கேட்பது சகஜமாகிவிட்டது.

அதனால் டாக்டர் பட்டீலின் (பட்டீல்வாடி) பண்ணையை பார்க்க தினமும் ஏராளமான பேர்கள் வந்தவண்ணமாயிருக்கிறார்கள். டாக்டர் பட்டீல் அவர்களை நன்கு வரவேற்று தன் பண்ணையைச் சுற்றிலும் காண்பித்து வருகிறார். பண்ணையில் தொழு உரம், கம்போஸ்டு உரம் கால்நடைகளுக்கு பச்சை தீவன (Silage) உணவு தயாரிப்பதைப்பற்றி நன்கு தெரிந்துகொள்வதுடன் கால்நடை வளர்ப்பைப்பற்றி சிறந்த முறைகளையும் தெரிந்துகொள்கிறார்கள். நூதன முறையில் விவசாயம் செய்ய விருப்பமுள்ள கிருஷிகர்களுக்கு டாக்டரின் (பட்டீல்வாடி) பண்ணை ஒரு சிறந்த மாதிரிப்பண்ணையாகவும், வழிகாட்டியாகவும் இருப்பதுடன் படித்து பட்டம் பெற்றவர்களும் ஒரு கிராமத்தில் ஒரு விவசாயப்பண்ணையை எப்படி லாபகரமாக நடத்தலாமென்பதற்கு ஒரு உதாரணமாகவும் விளங்கிவருகிறது.



பண்ணையில் கோதுமை விளைச்சலின் ஒரு பகுதி தோற்றம். டாக்டர் பட்டீல் தன் பண்ணையையும், பயிரிடும் முறைகளையும்பற்றி ஒரு விருந்தாளிக்கு சுற்றிக் காண்பித்துக்கொண்டிருக்கிறார்.

இந்த கட்டுரையும் வேண்டிய சித்திரங்களையும் (Block) கொடுத்துதவிய பம்பாய் ராஜ்ய விளம்பர டைரக்டர் அவர்களுக்கு கிருஷிகன் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறோம். —(ப—ர்.)

உலகில் மக்கள் தினசரி 21,80,00,000 பத்திரிகைகளை படிக்கின்றனர்; 16,00,00,000 ரேடியோக்கள்மூலம் கேட்கின்றனர்; 95,00,000 சினிமாவில் பார்க்கின்றனர்; 40,00,000 டெலிவிஷன் கருவியினால் பார்க்கவும் கேட்கவும் செய்கின்றனர். "UNASCO."

நாட்டின் பொருளாதார முன்னேற்றம் கைத்தொழில் பெருக்கத்தையும்; கைத்தொழில் மூலப்பொருள் உற்பத்தியையும்; மூலப்பொருள் உற்பத்தி உழவின் வளத்தையும் பொருத்திருப்பதால் உழவும் தொழிலும் ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாத சம்பந்தம் கொண்டுள்ளது. ஆகவே இப்பகுதியில் கைத்தொழில் சம்பந்தமான பல கட்டுரைகள் துடர்ந்து வெளியாகும். இதில் முதல் கட்டுரை அகில பாரத சர்க்கா சங்க ஊழியா எழுதியுள்ளார்.

படித்து பாருங்கள்.

உழவும் தொழிலும்

கிராமக் கைத்தொழில்கள் - - - - அழிவும் ஆக்கவேலையும்

ஸி. வி. தேவதாஸ்

[அ. பா. ச. சங்கம், வீரபாண்டி, திருப்பூர்.)

உலகம் நவீன நாகரீகத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது. ஐரோப்பா போன்ற மேற்கு நாடுகளில் விஞ்ஞான ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்க இந்தியாவிலும் மற்ற அண்டைநாடுகளிலும் ஆத்மாவிற்கு சாசுவதத்தை கொடுக்ககூடிய ஆத்மஞான அமிர்தத்திற்காக தீவிர முயற்சிகள் நடத்தப்பட்டு வந்தன. மேற்கு நாடுகள் பூலோகத்தை சொர்க்கமாக எண்ணி இன்பத்தை அனுபவிக்க பௌதீக ஆராய்ச்சிசெய்து கொண்டிருந்தன. ஆனால் அன்றும் கிழக்கு நாடுகள் உழைப்பின் பெருமையையும் இந்த உடல் அழியக் கூடியதென்றும் உணர்ந்து அற்புதமான ஆத்ம பலத்தை பெற்றன.

இந்தியமக்கள் பழமையிலிருந்தே சகோதரத்துவத்திற்கும், தாய்மைக்கும் புகழ்பெற்றவர்கள். அடுத்தவனை சகோதரனைக் கருதிவரவேற்று உபசரிக்கும் தன்மையுடையவர்கள். தன்னலத்தைச் சிறிதும் கருதாது பிறர் நலத்தை பேணுபவர்கள். கதியில்லாமல் சொந்த தேசத்தைவிட்டு வந்தவருக்கும் அடைக்கலம் அளித்தனர். ஆனால் வெளியிலிருந்து வந்தவர்கள் எத்தகைய நடவஞ்சகர்கள் என்பதை அவர்கள் உணரவில்லை "வளர்த்த கடா மார்பில் பாய்வது" என்ற பழமொழிக்கு ஏற்ப இந்த நாட்டிற்கு அகதிகளாக அல்லது நமது விருந்தினர்களாக வந்தவர்கள் திடீரென்று

நம்முள் சண்டைகளை மூட்டி, பிளவை ஏற்படுத்தி அதிகாரத்தை கைப்பற்றினார்கள். அன்றும் இந்தியமக்கள் பழைமையில் நம்பிக்கைகொண்டு இருந்துவிட்டனர். நயவஞ்சகம் இவர்களுக்கு தெரியாது என்பதும் இதன் காரணமாக இருக்கலாம். அத்துடன் நமது தொழில்களையும், ஆம் அவை கிராமத்தில் சகஜமாக நடைபெற்றுக்கொண்டு வந்த காரணத்தினாலும் அதன்மூலம் இங்கே சாந்தி நிலவுவதைக்கண்ட எரிச்சலாலும், வெள்ளையர்கள் அழிக்க திட்டம் வகுத்தனர்.

ஐரோப்பாவில் பௌதிக ஆராய்ச்சிகள்; விஞ்ஞானத்தின் (நிமிஷா நிமிஷ) முன்னேற்றம்; இதனால் மனிதசக்திக்கும் ஆத்மீக பலத்திற்கு எதிராக ஒருசக்தி கிளம்பியது. யந்திரங்கள் எங்கும்பரவின. ஆத்மீக பலத்தை நசுக்க சுய முயற்சியை அடக்க இந்த இயந்திரங்கள் இங்கே கொண்டுவரப்பட்டன. இயந்திரவாதம் வலுத்தது. கிராமத்தொழில்கள் அழிந்தது. சுபிட்சமும் திருப்தியும் சாந்தியும் நிலவியிருந்த இந்திய கிராமங்களில் பட்டினியும், சாவும் நித்திய அனுபவங்களாகி விட்டன. வேலையை தேடி அலையும் கூட்டம்; பிச்சைகேட்க படிவாசலில் காத்துநிற்கும் கூட்டம்; வீடில்லால் விடியும்வரை நடுத்தெருவிலும் விடிந்தால் கடிகார முட்களைப் போல நகரங்களை சுற்றிக்கொண்டு மிருக்கும் நிற்கதியான குடும்பங்கள்—இந்த காட்சிகள்தான் இன்று இந்திய மண்ணில் நாம் காணும் காட்சிகள்.

இப்பொழுது இயந்திரயுக காட்சிகளைக் கண்டோம் ஆனால் இந்த இயந்திரயுகம் இங்கு ஆரம்பிக்குமுன் நிலமை எப்படி இருந்தது என்பதை ஸ்ரீரவீந்தரநாத டாகூர் கூறுவதைப் பாருங்கள்!

"அந்தக்காலத்தில் இந்தியா உள்ளேயிருந்து தாளிட்டு பூட்டப்பட்டிருந்தும் வெளியில் ஒருவருக்கும் தெரியாமலிருந்ததுமான ஒரு ரசாயன ஆராய்ச்சி சாலையாக இருந்தது. இந்திய பண்பிற்கும், கலைக்கும் ஏற்ற ஏதோ ஒரு நாகரீகத்தை ஏற்படுத்த அங்கே ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். இந்தியாவிலிருந்த முனிவர்கள் ஆத்மாவிற்கு சாந்தியையும் சமாதானத்தையும் கொடுக்கக்கூடிய அமிர்தத்தை அடைய ரகசியமாகவும் புத்தி பூர்வமுமான பரீட்சைகளும் முயற்சியும் செய்துவந்தனர்"

இந்தியா என்ற இந்தப்பெரிய நகரத்தில் நாம் அன்று சில சாதாரண உடைகளை உடுத்திக்கொண்டும் ஊரைச் சுற்றிக்கொண்டும் மத்யான சாப்பாட்டிற்கும் பின் சிறிதுகண் அயர்ந்தும், நமது பழக்க வழக்கங்களில் நம்பிக்கைக்கொண்டும் சுகமாகவும் சாந்தியாகவும் வாழ்ந்து வந்தோம் நம்மிடையில் எவனாவது ஒரு வாலிபன் வழிதவறிவிட்டால் அவனை எச்சரித்தும் தடுத்தும் வந்தோம். இப்படி சுகமயமான வாழ்க்கை நடந்து வரும்போதுதான் திடீரென்று ஐரோப்பியர் இங்கு வந்து நமது சமாதானம் என்ற குளத்தில் கல்லை எறிந்து அதில் அலைகள் ஏற்படுத்தி விட்டனர்.

மேலே சொன்னது கைத்தொழில்களின் முன்னேற்றயுகம் எனலாம். ஆகையால் காந்திஜி நம்முன் புதிய விஷயத்தை ஒன்றும் வைக்கவில்லை.

ஆனால் பழையதை புதுப்பித்து நம்மிடம் வைத்தார். இயந்திரங்களின் மூலம் தான் குவியல் முறை எற்பட்டது. அநேகம் லட்ச மக்களுக்கு வேலையில்லாமல் ஒரு குறிப்பிட்ட லட்சம் பேருக்குமட்டும் வேலை கொடுக்கக் கூடியது இயந்திரத்தொழில் முறை என்பதை அவர் உணர்ந்தார். ஸ்வராஜ்யத்தை அடைய எவரும் ராஜீய அதிகாரம் மட்டும் கிடைத்தால் போதாது என்பதை அவர் வற்புருத்தினார் சமூகபபொருளாதார திட்டங்களையும் வகுத்து நம்முன் வைத்தார். எவரும் 15% நகரவாசிகளின் நன்மைக்காக இயந்திரங்களை தடைசெய்ய இந்திய சர்க்கார் மறுக்குமானால் 85% கிராம வாசிகள் வேலையில்லாமல் மண்ணோடு மண்ணாக மடிய நேரிடும் என்று எச்சரித்தார்.

காந்திஜியின் உபதேசத்தை கேட்க மறந்ததின் காரணமோ என்னமோ தெரியவில்லை. இன்று பட்டினியாலும் நோயாலும் அவதியுறும் மக்கள் தொகை அதிகமாகிக் கொண்டேவருகிறது.

வெள்ளையர் இங்கு விட்டுச்சென்ற பொருளாதாரமுறை, (நோயும், பஞ்சமும் அறிவின்மையும்) ஒழிய வேண்டுமானால் உடனே சர்க்காரும் மக்களும், சர்வோதய திட்டத்தை எற்று நடத்த முன்வரவேண்டும். அரசியலைக் கைப்பற்ற எண்ணும் கட்சிகளும் ஆக்கவேலையில் ஈடுபட்டே தேச நலனுக்காக பாடுபடலாம் ஆகையால் ஸர்வோதய திட்டத்தின் வெற்றிக்காக ஆண்டவனை பிரார்த்திப்போம்.

கிருஷிகன் நேயர்களுக்கு

உங்கள் அபிப்பிராயம் என்ன ?

சர்க்கார் உத்தேசித்திருக்கும் நிலவரி உயர்வு அவசியமா ?

எல்லா இடங்களுக்கும் ஷை வரி போடலாமா அல்லது அபிவிருத்தி செய்யப்படும் இடங்களில் மட்டும் இருக்கலாமா ?

உணவுப்பொருள் வியாபாரப்பொருள் இரண்டுக்கும் ஷை வரி அவசியமா அல்லது வியாபாரப்பொருள்களுக்குமட்டும் போடலாமா ?

உணவுக் கொள்முதல், ரேஷன் கண்ட்ரோல்கள் இன்னும் நீடிக்கவேண்டுமா ?

இவைகளைப்பற்றி உங்கள் அபிப்பிராயத்தை
சுருக்கமாக எழுதி அனுப்புங்கள்.

—ஆசிரியர்.

கிராம சுகாதாரம்
அல்லது
சுக வாழ்வுக்கான மார்க்கம்

அ. அம்பலவாணன்
சுகாதார இன்ஸ்பெக்டர்
விழுப்புரம்
மேற்கு ரேஞ்சு

கிராமங்கள் செழித்தால்தான் நாடு செழிக்கும். கிராமங்கள் முன்னேறினால்தான் நாடும் முன்னேறும். ஆனால் இன்று எத்துறையிலும் பற்றாக்குறையாகவே இருப்பதை காண்கிறோம். இப்பற்றாக்குறை தீர்ந்து நாடு செழித்து உற்பத்தி பெருக ஆரோக்கியமுள்ள உழைப்பாளிகள் வேண்டும். ஆரோக்கியமாக வாழ கிராமங்களிலோ வைத்தியர்கள் இல்லை. வைத்திய வசதிகளும் கிடையாது. இந்நிலையில் நோயற்ற ஆரோக்கிய வாழ்வு பெற சுகாதார முறைகளை அனுஷ்டித்தல் அவசியம். இக்கிராம சுகாதார முறைகளை, கிராம மக்கள் எளிதில் தெரிந்துகொள்ளும் வகையில் விரிவாக பல கட்டுரைகளில் சுகாதார இலாகாவில் 20 வருடங்களுக்கு மேலாக சேவை செய்துவரும் ஸ்ரீ அம்பலவாணர் கிருஷிகனுக்கு எழுதி வருவார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இது அவரின் முதல் கட்டுரையாகும். —ப-ர்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அந்நாட்டு மக்களின் வாழ்க்கை நிலை ஓங்கவேண்டும். வாழ்க்கை நிலை ஓங்க உடல் நலம் பெரிதும் பேணப்படல் அவசியம். இதற்கு இன்றியமையாதது பொருளாதாரம்—செல்வ பெருக்கு. அதாவது உடல் நலம் பேண மக்களுக்கு போதிய செல்வம் தேவை. வறுமை நீக்கி மக்களுக்கு வருவாய்க்கு வழி தேடல் அவசியம். ஒரு நாட்டின் முதன்மையான செல்வம் அந்நாட்டின் மக்கள் உடல்வளம்தான். இது கிராமங்களில் காணப்படவேண்டும். எல்லாவித நோய் தோன்றுவதற்கும் மூல காரணமாயிருப்பது கிராமங்கள்தான். ஏனெனின் கிராமங்களில் சுகாதார வசதிகள் மிக குறைவு. ஆகையால் கிராம வாழ்க்கை நிலை ஓங்கவேண்டும். அதில் வாழும் மக்கள் உடல் நலம் பேணப்படல் வேண்டும்.

மக்கள் உயிர்வாழ இன்றியமையாதது தூய நறுங்காற்று. நகரங்களில் மக்கள் பெருக்கால், இடவசதியின்மையால், தூயகாற்று கிட்டுவது அருமை. ஆனால் கிராமங்களில் இத்தகைய நெருக்கம் இல்லை. திறந்த வெளிகள். தோப்புகள் முதலியன உள்ளன. தூய காற்று உட்கொள்ள போதிய வசதி உண்டு. ஆனால் கிராம மக்கள் சுகாதார விதிகளை கவனிப்பதில்லை. வீடுகள், குடிசைகள், காற்றோட்டமுள்ளவையாய் அமைத்தலில்லை. தெருக்கள் ஒழுங்காக அமைப்பது கிடையாது. வீட்டிற்கு எதிரில் மாடுகள் கட்டுவது, மூத்திரம் சாணம் முதலியன தேக்குவது, சாணம், சாம்பல், குப்பை இவைகளை வீடுகள் ஓரத்தில் குவிப்பது முதலியன சாதாரணமாய் கிராமங்களில் காணப்படுகின்றன. இதனால்

தூய காற்று நுகரும் பேறு மக்களுக்கில்லாமல் தீய காற்றை பருக ஏற்பாடு செய்துகொள்ளுகின்றனர். ஏழ்மையான குடிசையானாலும் சமைப்பதற்கு, சாமான்கள் வைப்பதற்கு, துயில்வதற்கு என தனித்தனி அறைகள் நல்ல ஜன்னல் வசதிகளுடன் அமைத்தல்வேண்டும். வீடுகளுக்குப்பின் வீடுகள் கட்டுதல், குளக்கரையில் வீடுகள் கட்டுதல் முதலியன சுகாதாரத்திற்கு கெடுதலானவை. மாடுகளைத்தனியே மாட்டுத் தொழுவத்தில் கட்டி, சாணம், குப்பை முதலியவைகளை வீட்டிற்கு பின்புறத்தில் சதுரமான பள்ளம் வெட்டி, அதில் தினசரி கொட்டி, ஈக்கள் உற்பத்தியில்லாமல் அதை தினசரி மண் அல்லது மணல்போட்டு மூடிவிடவேண்டும். இவ்விதம் செய்தால் நல்ல உரம் கிட்டுவதுடன் சுகாதாரத்திகும் கெடுதலில்லை. மழைகாலத்தில் துர்நாற்றம் உண்டாவதில்லை. தூயகாற்றை கெடுப்பதுமில்லை.

மக்களுக்கு இரண்டாவதாக வேண்டற்பாலது தூயநீர். அநேக பிணிகள் நீரினால் உண்டாகின்றன. குடிதண்ணீரை பாதுகாப்பதனால் வாந்திபேதி, சீதபேதி, பித்தவாத சுரம், நரம்புச்சிலந்தி, வயிற்றுப்போக்கு முதலிய வியாதிகள் வாராவண்ணம் பாதுகாக்கலாம். குளத்துஜலம், ஆற்றுஜலம், நடைகேணி ஜலம் எப்போதும் ஆபத்துகிடமானது. நரம்புச்சிலந்தி வாந்திபேதி முதலிய வியாதிகள் அதிதீவிரமாய் இந்த ஜலததினால் பரவிவிடும் ஆகையால் கிராம மக்கள் குளத்துஜலம் ஆற்றுஜலம் கொதிக்க வைக்காமல் அருந்தக்கூடாது. அதற்குபதிலாக ஒவ்வொரு கிராமத்திலும் இறங்க முடியாமலிருக்கும் சேந்துக்கிணறுகள் அமைக்கப்படல் அவசியம். தண்ணீர் சேந்தி அருந்தும்படி இருக்க வேண்டும். கூடுமானால் கேணியில் பம்புவைத்தல் நலம்.

கிராம மக்கள் தாங்கள் உட்கொள்ளும் உணவில் கவனம் செலுத்துதல் அவசியம் கிராம மக்கள் வாழ்க்கைத்தரம் நம்நாட்டில் தாழ்ந்துள்ளது. வாழ்க்கைத்தரம் தாழ்ந்திருப்பதால் பல நோய்களுக்கு பலியாகிறார்கள். வியாதியை எதிர்க்கும்படியான சக்தி போதிய உணவு இல்லாமையால் மக்களுக்கு இல்லை. போதிய வருவாயில்லை. வருவாய் சொற்பமுடையவர்களும் அறிவுத்திறனுடன் சத்துள்ள உணவுக்கு செலவிடுதலில்லை. இவர்கள் உண்ணும் உணவில் உறம் மிகக்குறைவு. எனவே நோயணுகாது தடுக்கும் ஆற்றல் அவர்களுக்குத் தகுந்தவாறு இருப்பதில்லை. வயதுவந்த ஒருவருக்கு நாளொன்றுக்கு 2800 காலோரி உணவுச்சத்து தேவையாயிருக்கிறது. ஆனால் இங்கு பெரும்பாலோர் உட்கொள்ளும் உணவில் 1500 முதல் 2000 காலொரிகள் மட்டுமே உள்ளன. மூன்றில் ஒருபங்கு பேருக்கு ஒரு நாளைக்கு ஒருவேளை உணவுகூட சரியாக கிடைப்பதில்லை. இந்த குறைந்த உணவும் சமன் செய்யத்தக்கனவாயில்லை. உணவில் உடலுக்கு மூவகை பலனுண்டு. (1) ஆக்கந்தறுதல். (2) உடலாக்கத்திற்கு உற்றவையுதவுதல். (3) விட்டமின்கள் உதவுதல். இதற்குவேண்டிய உணவுப் பொருள்கள் கிராமங்களிலேயே கிடைக்கின்றன. உற்பத்தி செய்யலாம்.

ஒரு மனிதனுக்கு ஒரு நாளைக்கு வேண்டியது பின்வருமாறு.

தானியவகை கம்பு, கேழ்வரகு, சோளம் கோதுமை, அரிசி	14	அவுன்ஸ்
பயறு வகைகள் பருப்பு முதலியன	3	,,
கீரை வகைகள் ...	4	,,
கிழங்கு வகைகள் ...	3	,,
மற்ற காய் வகைகள் ...	3	,,
பால் ...	10	,,
சர்க்கரை அல்லது வெல்லம் ...	2	,,
எண்ணெ ...	2	,,
பீன்ஸ் அல்லது மாமிசம் ...	3	,,
முட்டை ..	1	,,

மேலே குறிப்பிட்ட பொருள்கள் ஒவ்வொரு கிராமத்திலேயும் கிடைக்கும். கம்பு கேழ்வரகு சோளம் சாப்பிடுபவர்கள் மாவை களியாகக்கிண்டி சாப்பிட வேண்டும். பழவகை என்றது எந்தப் பழமாயிருந்தாலுஞ்சரி. நாரத்தை, எலுமிச்சை, வாழை இவைகள் வீட்டுத்தோட்டத்திலேயே உற்பத்திச்செய்ய லாம். இவ்விதம் சமன்செய்யப்பட்ட உணவு சாப்பிட்டால் உடல் உறம் பெற்றிருக்கும்.

கிராம மக்கள் உடல்நலம் குன்றியிருப்பதற்கு முக்கிய காரணம் கல்வி யின்மை. உடல் வளர்ச்சிக்கு எவை எற்றவை என்று உணர்ந்துகொள்ள முடியாதவர்களா யிருக்கிறார்கள் மக்களின் குணத்தையும், பொது அறிவை யும் பெருக்கும் கல்விதான் மக்களின் உடல் நிலையையும் வளர்க்கவல்லது. ஒரு நாட்டுமக்களின் உடல் நிலைக்கும், கல்வி நிலைக்கும் தொடர்பு இல்லாதது போல் தோற்றலாம். மக்கள் உடல்நிலையை சீர்ப்படுத்திக்கொண்டு வாழ தடைகளாயிருப்பவை அறியாமை, மூடநம்பிக்கையேயாகும். இவற்றைப் போக்க அறிவு (கல்வி) அவசியம் ஆகவே ஆண் பெண் இருதிறத்தாரும் கல்விகற்றல் அவசியம். கிராமங்களில் தொத்து வியாதிகள் பரவியுள்ள காலங்களில் மூடநம்பிக்கையுள்ள மக்கள் வியாதிகள் விதிப்படி வருகின்றன வென்றும், கர்மம் என்றும், தேவதைகளின் கோபம் என்றும் மருத்துவ உதவிபெறவோ சுகாதார உதவிபெறவோ முயலுவதில்லை. கல்வியைக் கொண்டும் பிரசாரத்தைக்கொண்டும் இம்மன நிலையை மாற்றக்கூடும்.

ஆகவே கிராம மக்கள் தங்கள் தினசரி வாழ்க்கையில் கிராமங்களில் சுத்தக்காற்று உலவும்படியும், சுத்த நீர் உட்கொள்ளும்படியும் காற்றுள்ள குடிசைகளோ, வீடுகளோ ஒழுங்காக அமைத்தும் கிடைக்கும் பொருளைக் கொண்டு சத்துள்ள உணவு உட்கொள்ளும்படியும், சாணம், எரு, குப்பை முதலியவைகளை நல்ல எருவாக செய்து, உணவுப்பொருள்கள் உற்பத்தி செய்தும், 'வெள்ளம் வருவதற்குமுன் அணைப்போடு'வதுபோல வியாதி கள் அணுகாவண்ணம் தங்கள் உடல் நலனைப்பேணி பிணியை எதிர்க்கும் ஆற்றல் உள்ளவர்களாக வாழ்வார்களாக!

நோயும் - மருந்தும்

1. தேள், சிலந்தி, நூற்றுக்கால் பூச்சி முதலியவை கடித்தல் :—முதலில் கடித்த இடத்தில் இருக்கும் கொடுக்கை அல்லது முள்ளை மெதுவாக எடுத்துவிடவேண்டும். பிறகு சோடாவிலே சில சொட்டு தண்ணீர்விட்டு குழப்பி அந்தப் பசையைக் கொட்டு வாயிலே வைத்து அப்பலாம். அல்லது அம்மமானியாத் தண்ணீரிலே ஒரு துணியை நனைத்து இலேசாக பிழிந்து கொட்டுவாயைச் சுற்றி கட்டலாம். தேள் கடிக்கு இந்த அம்மமானியாத் தண்ணீர் மிகவும் நல்லது. எலுமிச்சம்பழத்தை அறுத்து கடித்த இடத்தில்வைத்து தேய்க்கவேண்டும். —(நல்வழி)

● ● ●

2. அழிஞ்சில் மரத்தின் கொட்டையை சந்தனக்கல்லில் உரைத்து அதை கொட்டிய இடத்தில் தடவி சூடேற்ற விஷமும் வலியும் இறங்கிவிடுகிறது. —(ஒரு அனுபவசாலி)

● ● ●

3. பல்வலிக்கு உஷ்ணம் சுகமாக இருப்பதாக தெரிந்தால் கன்னத்திலே ஒரு வெந்நீர் பாட்டிலை வைத்துக்கொண்டிருக்கலாம். குளிர்ச்சி இதம் அளிக்கும்பக்ஷத்தில் வாயில் கொஞ்சம் தண்ணீரையாவது ஐஸ்ஸையாவது அடக்கி வைத்துக்கொண்டிருக்கவும். பல்லிலே துவாரம் இருந்தால் கிராம்பு தைலத்தில் கொஞ்சம் பஞ்சை தோய்த்து அதனுள்ளே திணித்துவைப்பது நல்லது. சொத்தைப்பல்லை கூடிய சீக்கிரம் டாக்டரிடம் காண்பித்து பரிகாரம் செய்துகொள்ளவேண்டும். —(நல்வழி)

● ● ●

4. கண்ணில் பலவிதத் தூசிகள் படிந்து கண் உறுத்தலும் வலியும் ஏற்படக்கூடும். கண்ணில் விழுந்தது இரும்புத் தூளாக இருந்தால் காந்தக் கம்பிக்கொண்டு எடுத்துவிடலாம். மயில்துத்தம் 3% வீதம் ஜலத்தில் கரைத்து கண்ணில் அடிக்கடி விட்டு வந்

தால் இருப்பு சிறிது சிறிதாக கரைந்து, வெளியாகும். சுத்தமான விளக்கெண்ணை ஒன்றிரண்டு சொட்டுவிட்டு கண்ணைக் கட்டி வைத்துவிட்டால் மறுநாள் காலை தூசி துப்பு இவைகள் கண்ணோரமாக ஒதுங்கிவிடும் போடும் எண்ணை சுத்தமாக களிம்பின்றி இருக்கவேண்டும்.

● ● ●

5 நீரிழிவு வியாதியுள்ளவர்கள் பாகல் செடியின் சாறு அரை அவுன்சும் பால் இரண்டு அவுன்சும் சேர்த்து 2 வாரத்திற்கு தினமும் சாப்பிட்டு வரவேண்டும். சாப்பிடும் அளவு அவரவர்களுக்கு தக்கபடி எடுத்துக்கொள்ளவேண்டும். பத்தியம் கிடையாது. ஆனால் இதை சாப்பிட்டு அரைமணிநேரம்வரை வேறு ஆகாரம் உட்கொள்ளக்கூடாது. இது குடலிலிருந்து மலத்தைக் கழிக்கவும் உதவும். நோயாளியின் மூத்திரத்திலுள்ள சர்க்கரைச் சத்து நாளாரம்பத்தில் மறைந்துபோவதல்லாமல் அடிக்கடி மூத்திரம் பெய்வதும் அதிக தாகம் எடுப்பதும் நின்றுபோகின்றன. இதன் குணம் நிரந்தரமானது. இந்தமாதிரி குணம் அடைந்திருப்பவர்களில் அநேக வியாதியஸ்தர்களை எனக்குத் தெரியும். சிகித்சை எடுத்துக்கொள்ளுமுன்பு 63 வயதுள்ள விருத்தாப்பரின் மூத்திரத்தில் 7½% சர்க்கரை இருந்தது. 1 வருஷ சிகிச்சைக்குப் பின்பு இப்போது நல்ல சுகத்துடன் இருக்கிறார். தன்னுடைய தோட்டத்தில் 6 முதல் 8 மணிநேரம் களைப்பில்லாமல் வேலை செய்கிறார்.

—(V. T. S.)

ஏன் இந்த குறைவு?

இதாலியில்	ஏகர் 1-க்கு	அரிசி உற்பத்தி	3120	ரூத்தல்கள்
ஜப்பானில்	,,	,,	2280	,,
எகிப்தில்	,,	,,	2160	,,
சீனாவில்	,,	,,	1560	,,
ஐக்கிய அமெரிக்கா	,,	,,	1500	,,
சையாம்	,,	,,	900	,,
பர்மா	,,	,,	825	,,
இந்தியா	,,	,,	780	,,

விவசாயிகளே உணர்ச்சியில்லையா?

பசுமாட்டைப்போல் தீனி தின்பதில்லை. ஆனால் பசுவைப்போல் பால் கொடுக்கிறது. மரங்களின் சாறு போல் புளிப்பு, கசப்பு, கெட்டியாதல், துர்கந்தம் இல்லை. ஆனால் பசுப்பாலைப்போல், குணம், மணம், நிறம், ருசி எல்லாம் இருக்கிறது இது கிடைத்தால் இந்தியாவில் பால் பஞ்சம் இல்லையல்லவா ?

பார் பார் ! என்ன விநோதம் பார் !!

மரப்பசு அல்லது பால் தரும் மரம்

சென்ற நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் பார்பூலா (Barbula) காட்டின் தாவரங்களின் ஆராய்ச்சியாளர்களால் இந்த பால் மரமானது கண்டு பிடிக்கப்பட்டது. இந்த மரமானது சாதாரணமாக 80 முதல் 100 அடி வரை வளர்வதுடன் நிறைந்த தழைகளையுடையதாகும். இந்த மரம் நல்ல வளமான பூமியில் நன்றாக வளர்வதுடன், ஈரம், வரட்சியான காலங்களிலும் கூட வருடம் பூராவும் பல குணங்களிலும் பாலைப்போன்ற வெண்மையான திரவப்பொருளை கொடுப்பதனால் இது ஒரு அதிசய வஸ்துவாக காணப்பட்டது.

அநேக தினுசான மரங்களிலும் இவ்விதமான பால் வடிவதுண்டானாலும் பெரும்பாலும் அவை புளிப்பு, கசப்பு, விஷத்தன்மையுள்ளதாகவே இருக்கும். ஆனால் பார்பூலாவாசிகள் இன்னும் அதன் சாரை (பால்) எடுத்து சாப்பிட்டு வருகிறார்கள். ஆனால் இந்த மரத்தின் சாறு (பால்) அவைகளைப் போலன்றி, பசும்பாலைப்போன்ற வெண்மைநிறம், ருசியுள்ள இனிப்பு, ஊட்டமான சத்து, மனதிற்கு பிடித்தமான மணம் முதலிய குணங்கள் பொருந்தியிருக்கிறதாம். இதனால்தான் இதை மரப்பசு அல்லது பால்மரம் என்று கூறுகிறார்கள்.

இந்த மரத்தின்பால் எப்போதும் கெட்டியாவதில்லை. தண்ணீரைவிட கெட்டியானது தண்ணீரில் சேர்த்தவுடன் கலந்துகொள்ளும் குணம் வாய்ந்தது. சூடேற்றினால் பொங்குவதில்லை. ஆனால் சிறிது மஞ்சள் நிறமான ஏடை படிகிறது. அப்பிரதேசவாசிகள் இதை ரொட்டி தானியங்களுடன் கலந்து உட்கொள்ளுகிறார்கள். இதில் சர்க்கரை, கொழுப்பு, அல்பமின், பாஸ்பேட் போன்ற வஸ்துக்கள் இருக்கின்றனவாம்.

அப்பிரதேசவாசிகள் இதை ஸ்வாசகாசம் (Asthma) வயிற்றளைச்சல் (Dysentry) போன்ற வியாதிகளுக்கு மருந்தாக உபயோகிக்கிறார்களாம். மரப்பட்டையிலிருந்து ஒருவித ஆடைகளும் தயாரிக்கப்படுகிறதாம்.

இந்த உபயோகமுள்ள மரத்தின் உற்பத்தியை இந்தியாவில் சோதிக்க பம்பாய் ராஜ்ய சர்க்கார் 1879--80 ஆண்டில் முயற்சி செய்தார்கள். ஆனால் தென்னமெரிக்காவிலிருந்து இங்கிலாந்து வழியாக வரவழைக்கப்பட்டது. சரியான முறையில் பக்குவப்படுத்தி அனுப்பாததால் விதைகளின் வீரியம் குறைந்துபோய் முதல் முயற்சி தோல்வியுற்றது.

ஆனால் இப்போது துரிதமாக விதைகளை கொண்டுவர பல வசதிகள் இருப்பதால், அதன் உற்பத்தியை சோதிக்க மீண்டும் முயற்சி செய்யப்படுவதாக தெரிகிறது. அப்படி இந்த மரம் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டால் ஏழை மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகுமல்லவா ?

—[பார்மர்.]

ஜப்பானியரிடம் நாம் தெரிந்துகொள்ளவேண்டியது?

["ஜப்பானில் விவசாயமும் குடிசைத்தொழிலும்" என்னும் புத்தகத்தில் ஸ்ரீ சிமன்லால் தேசாய் எழுதியுள்ளது.]

ஆசியா கண்டத்திலேயே ஜப்பான் பல துறையிலும் முன்னேற்ற மடைந்த நாடாக இருந்தாலும், வீடுகளிலும் வயல்களிலும் கிராமங்களிலும் நகரங்களிலும் மலஜலங்களை வீணுக்காமல் சேகரிப்பதில் பழைய முறைகளை கைவிடாமல் இருக்கிறார்கள் என்பதை நாம் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும். நான் டோக்கியோவில் (ஜப்பான்) தங்கியிருந்தபோது நகர அலுவலகத்தாருக்கு (Municipality) நகர சுத்தியாளர்களை (Sweeper) தினம் 2 தடவை அனுப்பவேண்டுமென்று கோரினேன். இந்த எனது வேண்டு கோள் அந்த நகர அதிகாரியை பிரமிக்கச் செய்துவிட்டதாம். பொதுவாக மலஜலத்தை மாதத்துக்கொருதடவை தான் அப்புறப்படுத்துவது வழக்கமாக இருந்தபோதிலும், தங்களுக்காக பிரத்யேகமாக தனிப்பட்ட முறையில் 10 தினங்களுக்கு ஒருமுறை அனுப்புவதாக எழுதியிருந்தார்.

ஒவ்வொரு வீட்டிலும் ஆழமுள்ள குழியில் மலஜலங்கள் சேர்க்கப்படு கிறது. அதின் துர்க்கந்தம் வெளியில் பரவாமலிருப்பதற்கு ஒவ்வொரு வீட்டிலும் மருந்துகள் வைக்கப்பட்டிருக்கிறது. தினமும் 2 தடவை ஷை மருந்துகளை உபயோகித்து, நகர சுத்தியாளர்கள் வரும் வரையில் சேகரப் படுத்தி, நகர சுத்தியாளர்கள் (இங்கேபோல் திறந்த வண்டியல்லாமல்) சுத்த மான மூடியுள்ள மரப்பெட்டியுடன் வரும்வரை காத்திருப்பார்கள். ஷை நகர சுத்தியாளர்கள் வந்ததும் ஷை மரப்பெட்டிகளில் போட்டு மூடி, வண்டி களில் ஏற்றிக்கொண்டுபோய் அப்புறப்படுத்துவிடுவார்கள்.

ஒரு ஜப்பானிய உயர்தர அதிகாரியிடம் "ஏன், இந்த மலஜலங்களை சமுத்திரத்தில் கொட்டிவிடக்கூடாதா" என்று கேட்டேன். அவர் சொன் ஞர் "அது வீணுகிவிடும். நாங்கள் ஒன்றையும் வீணுக்கி எறிந்துவிடுவதில்லை. அது மிகவும் விலை உயர்ந்தது" என்று சொன்ஞர்.

அங்கு சாதாரண விவசாயிகள்கூட மலஜலத்தின் மதிப்பை உணர்ந் திருக்கிறார்கள். வயல் ஓரத்தில் ரோடுகளில் நின்றுகொண்டு தங்கள் வயலையே கக்கூசாக உபயோகிக்கும்படி அழைப்பார்கள் (தன் வயலை வளப் படுத்தும் நோக்கத்துடன்). சில இடங்களில் "வழிப்போக்கர்களே இங்கே மலஜலம் கழியுங்கள்" என்ற விளம்பரப் பலகைகள்கூட நடப்பட்டிருக் கின்றன. [அவ்விடத்திய விவசாயிகள் குப்பை எருவின் விலையுயர்ந்த மதிப்பை நன்குணர்ந்தவர்கள்".

இங்கு மலஜலம் கழிக்கக்கூடாது என்று பலகை போட்டுக்கொண்டு, ஜப்பானிலிருந்து அரிசியை இறக்குமதி செய்யுங்கள் என கூப்பாடு போடும் நம் ஜனங்கள், எருவின் மதிப்பையும அவசியத்தையும் உணர்ந்து எப்படி போற்றுகிறார்கள் எனபதை தெரிந்துகொண்டால் நம் நாட்டிலும் உற்பத்தி பெருகி பஞ்சம் தீருமல்லவா.

—[பார்மர்.]

[உற்பத்திக் குறைவினால் உணவுப்பஞ்சம் ஒருபக்கம்; உணவுப் பஞ்சத்தினால் பட்டினித்தாண்டவம் மறுபக்கம்; வெளிநாட்டு இறக்குமதியால் பொருளாதார சீரழிவு ஒருபக்கம்; அதற்கும் கப்பல் வசதியில்லாத கஷ்டம் மறுபக்கம்; இந்த நிலை ஒழிய அதிக உற்பத்தி சாத்தியமா? என்பதுதான் பிரச்னை. அது சாத்தியமே என்கிறார்கள் நம் விவசாயிகள்.]

சாத்தியமா?

★

1. மதுரை நகரைச்சேர்ந்த புதூர் ரக்ஷண்யபுரத்தில் அனாதை பெண்கள் கழகத்தை சேர்ந்த தலைவி Miss. ப்ரொளன் என்பவர், பள்ளியை சார்ந்த நிலத்தில் ஏகர் 1-க்கு 8509 ராத்தல் (48 மா. கொண்ட 70 மூட்டை) நெல் மகசூல் உற்பத்தி செய்திருக்கிறார். (விபரம் அடுத்த இதழில்)

2. பம்பாய் மாகாணம், பெல்காம் ஜில்லா, சந்துகாடை சேர்ந்த ஸ்ரீ ஹம்பர்வாடி என்பர் ஏகர் 1-க்கு 6216 ராத்தல் வீதம் நெல் உற்பத்தி செய்திருக்கிறார். இவர் ஏகர் 1-க்கு 20 வண்டி தொழு உரம், 5 வண்டி சாம்பல் உரம், 200 ராத்தல் சுண்ணாம்பும் சல்பேட்டும், 300 ராத்தல் நெல் கலப்பு உரமும் போட்டார். Y 4 என்கிற ரகத்தை சேர்ந்த நெல் தினுசு பயிரிடப்பட்டதாம்.

3. மேற்கு வங்கத்தைச்சேர்ந்த விவசாயி ஜோகேஷ் சந்திரபாணி என்பவர் ஏகர் 1-க்கு 73 ம. 30 சேர் (5560 ராத்தல்) நெல் உற்பத்தி செய்து முதல் பரிசும், 'கிருஷி பண்டிட்' என்ற பட்டமும் பெற்றிருக்கிறார். இந்தியாவின் சராசரி உற்பத்தி அளவு 1000 ராத்தல்தானாகும். முன்னதாகவே உழுது தயாராக வைத்திருந்து மழை பெய்த உடன் ஏப்ரல் மாதத்தில் விதை விதைக்கப்பட்டதாம். 8 வண்டி தொழு உரமும், 246 ராத்தல் எலும்புத் தூளும் உரமாக இடப்பட்டதாம். இத்துடன் நெல் தாளும் உழுது மடிக்கப்பட்டது. உற்பத்தி செய்யப்பட்ட நெல் 'அபிமான்' என்னும் மோட்டா ரகத்தை சேர்ந்ததாம்.

4. வட கன்னடத்தை சேர்ந்த கணேச ராவ் திலாங் என்பவர் எக்கர் 1-க்கு 5000 ராத்தலுக்கு 2 வருடங்களாக நெல் உற்பத்தி செய்துவருகிறார். நல்ல வடிகால் வசதியுள்ள கரிசல் மண் பூமியில், மார்கழி—தை மாதத்தில் நன்றாக உழுது புழுதியாக்கி வைத்திருந்து கோடையில் மழை பெய்த உடன் ஏகர் 1-க்கு 50 ராத்தல் வீதம் கொருகலப்பை (Seed drill) யால் சாலையாக விதைக்கப்பட்டது. 5 வண்டி தொழு உரம், 320 ராத்தல் நெல் கலப்பு உரம் கலந்து போடப்பட்டது. ஆனி மாதத்திலும் ஆவணி மாதத்திலும் இரண்டு தாம் இடையுழவு (Inter culture) செய்து களைகள் எடுக்கப்பட்டது. புரட்டாசி கடைசியில் புஷ்பித்து கார்த்திகை கடைசியில் அறுவடை செய்யப்பட்டது. இது, மொட்ட ஹலகா, என்ற மோட்டா ரக நெல் தினுசாகும்.

ஏன்! நீங்களும் செய்து பாருங்கள்

நமக்கும் நல்லது -:- நாட்டுக்கும் நல்லது.

உங்களுக்கு தெரியுமா?

உணவு பற்றுக்குறையை சரிக்கட்ட சர்க்கரை வள்ளிக்கிழங்கை உபயோகிக்கவேண்டியிருக்கிறது. ஆனால் வருடம் பூராவும் கிடைக்கிறதா இல்லை அதனால் கிடைக்கும்போதே வாங்கி அதை பக்குவப்படுத்தி வைத்துக்கொள்வது நல்லதல்லவா?

இதோ பாருங்கள் பக்குவப்படுத்தும் முறைகள்!

1. நன்றாய் முற்றிய வள்ளிக்கிழங்கை வெட்டி எடுத்து நிழலில் காற்றோட வைத்திருந்து உலர்ந்த மணலை கனமாக கொட்டி நிரவி அவன்மேல் கிழங்கை வரிசையாக அடுக்கவேண்டும். இவ்வாறு முறையே ஒரு வரிசை கிழங்கும் ஒருவரிசை மணலும் அடுக்கடுக்காக நிரவி வைத்திருந்தால் கிழங்கு கெடாமல் பல மாதங்கள் இருக்கும். இப்படிச் செய்து வைத்துக்கொள்வதால் எக்காலமும் கிழங்கு கிடைப்பதுடன் பிற்காலம் நல்ல விலையும் கிடைக்குமல்லவா?

2. புதிய கிழங்கை எடுத்து தண்ணீரினல் சுத்தமாக கழுவி தோலை நீக்கவேண்டும். பிறகு வெண்மையான கிழங்கை தேங்காய் துருவல் மணையின்மேல் துருவி எடுத்துக்கொள்ளவேண்டும். ஆனல் காற்றுப்பட்டதும் துருவல் கறுமையாக மாறிவிடக்கூடுமாகையால் கொஞ்சம் சோடியம் ஹைட்ரோ சல்பேட் (Sodium Hydrosulphite) கலந்த தண்ணீரில் துருவி சேர்த்து பிறகு ஜலத்தை நன்றாகப் பிழிந்துவிட்டு ஒரு துணியின்மேல் வெய்யலில் காயவைத்துக்கொள்வதால் நிறம் மாறுவதில்லை. அப்படியே துருவலாகவோ அல்லது மாவாகவோ அறைத்தும் வைத்துக்கொள்ளலாம். இவ்விதம் காய்ந்த துருவல் அல்லது மாவு கிழங்கின் எடையில் ஒரு பாகம் இருக்கும். இந்த மாவை அரிசி மாவைப்போல் கோதுமை, சோளம் போன்றவைகளுடனும் குழம்புகள் தயாரிப்பதற்கும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். ரொட்டி, பிஸ்கோத்து முதலிய தின்பண்டங்களும் தயாரிக்கலாம். நீண்ட காலம் கெடாமல் இருக்கும்.

குறிப்பு:—முதலில் கூறிய முறையில் பதப்படுத்தப்பட்டுள்ள கிழங்குகள் 7 மாசமாகியும் இன்னும் தன் சுவை கெடாமல் நல்ல நிலைமையிலேயே இருந்துகொண்டு வருகிறது.

சர்க்கரை வள்ளியும் — உருளைக்கிழங்கும்

உருளைக்கிழங்கு விலை உயர்ந்தது. சர்க்கரை வள்ளிக்கிழங்கோ மலிவானது. அதைப் பயிரிடுவதும்கூட சுலபமானதுதான். ஆனல் அதிலுள்ள சத்துப்பொருள்கள் உருளைக்கிழங்கைவிட குறைவானதல்ல என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஆகவே சக்கரை வள்ளிக்கிழங்கும் உடலுக்கு ஊட்டமளிப்பதாகும். இதோ பாருங்கள்!

	ஈரம்.	கொழுப்பு.	புரதம்.	கார்போ ஹைட்ரேட்.	சாம் பல்.	காலோ ரிகள்.
உருளைக்கிழங்கு	77-8	2-0	0-1	19-1	1-1	385
வள்ளிக்கிழங்கு	68-5	1-8	0-7	27-9	1-1	565

ஒரு ராத்தல் எடையிலுள்ள சத்து.

	வைடமின் A.	C.	கால் சியம்.	பாஸ் பரஸ்.	இரும்பு சத்து.	மாங்க னீஸ்.
உருளைக்கிழங்கு	160	50	0-06	0-29	9-10	1-40
வள்ளிக்கிழங்கு	1360	50	0-10	0-23	7-7	4-4

குறிப்பு:— இது மேல்நாட்டு கிழங்கின் பரிசீலையாகும்.

மதிப்புரைக்காக அனுப்பப்படும் புத்தகங்கள், பத்திரிகைகள் இரண்டு பிரதிகளாக அனுப்பப்படவேண்டும்.

நமது களஞ்சியம்

மாத ஜோதிடம்:—ஜோதிட மாத வெளியீடு. 32, அரசமரம் தெரு, வேலூர் N. A. ஆசிரியர், ஸ்ரீ K. V. வெங்கிடசுப்ரமண்யம், விலை அணா 8, வருட சந்தா ரூ. 5.

"நாள் செய்வது நல்லோர் செய்யார்" என்பது முன்னோர்களின் வாக்கு. அந்தக்காலத்தில் எக்காரியத்தையும் நல்ல நாளும, நேரமும் பார்த்து முன்னெச்சரிக்கையுடன் செய்துவந்தனர் என்பது சரித்திரங்களின் மூலம் தெரியவருகிறது. இக்கலை சம்பந்தமாக உள்ள பல சாஸ்திரங்களே இதற்கு சான்று. இப்போது ஷை புத்தகங்களை ஆராய்ச்சிசெய்து சரியாக எடுத்துச்சொல்லாததால் பலன்கள் சரியாக இல்லாமலிருக்கலாம். அதனால் ஷை சாஸ்திரங்களே சரியல்ல என்பது பொருத்தமாகாது. மக்களின் வாழ்க்கையில் சதா காலமும் ஒட்டிவரும் இக்கலையின் ஆராய்ச்சிக்கெனவே இம்மாத ஜோதிடம் பத்திரிகை வெளியிடப்படுவது விரும்பத்தக்கதே.

இப்பத்திரிகையில் ஜோதிடக் கலை சம்பந்தமாக பல அரிய விஷயங்கள் (பல பழைய ஏடுகளை ஆராய்ந்து) வெளியிடப்பட்டு வருவதுடன், ராசி பலன்கள், நக்ஷத்திரவாரி தினப்பலன்கள், அதிருஷ்ட நாட்கள், வியாபார நிலவரம் போன்றவைகளும் பிரதிமாதம் வெளியிடப்படுகிறது.

ஆகவே இப்பத்திரிகையை, ஜோதிடக்கலையில் நம்பிக்கையுள்ளவர்கள் மட்டுமின்றி, நம்பிக்கையில்லாதவர்களும்கூட (இதில் கூறியுள்ளபடி நடக்கிறதா இல்லையா என்பதை பரிசோதிக்க) வாங்கி படிப்பது அவசியமென கருதுகிறோம்.

அறிவிப்பு

தற்காலம் ஏற்பட்டுள்ள காகித நெருக்கடியால் உத்தேசித்தபடி "கிருஷிகன் பஞ்சாங்கம்" சித்திரைமீ வெளியிடவில்லை. ஆனால் 1952 ஜனவரி 1உ வெளியிடப்பட்டு நமது சந்தா நேயர்களுக்கு அனுப்பிவைக்கப்படும். அதிகப்படி 0—5—0 அனுப்பியுள்ள நேயர்களுக்கு தழை (அல்லது) மா விதைகள் அனுப்பிவைக்கப்படும்.

1952ஆம் கிருஷிகன் நாட்குறிப்பு (Pocket Dairy) ஒன்று வெளியிட உத்தேசித்துள்ளோம். விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

மானேஜர், "கிருஷிகன்" காரியாலயம்.

நேயர்களின் கடிதங்கள்

.........நானும் எனது நண்பர்களும் தங்களிடம் வாங்கிய சபாஷ் கலப்பைகள் மற்ற கலப்பைகளைவிட நன்ருகவும் திருப்திகரமாகவும் வேலை செய்வதுடன் புஞ்சை நஞ்சை இரண்டிலும் சிறிய எருதுமாடுகளுக்கும் சுலபமாக இருக்கின்றன. ஆகவே எனது நண்பர் இருவருக்கு தலைக்கு 2 கலப்பைகள் வீதம் 4 கலப்பைகளும், 12 கொழுக்களும் அனுப்பிவைக்க கோருகிறேன். விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக தாங்கள் செய்துவரும் உதவிக்கு மிகவும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

அன்னியூர்,
30—3—51.

தங்கள் உண்மையுள்ள.
(ஒப்பம்.) S. அருணுசலம்.

தங்களிடம் 7 ஆண்டுகளுக்குமுன் வாங்கிய சபாஷ் இரும்புகலப்பைகள் இரண்டும் இன்னும் நன்ருக வேலை செய்துகொண்டிருக்கின்றன. அதிலும் ஒரு கலப்பையின் இறக்கை இந்த ஆண்டில் கிராமத்திலேயே ரிபேர் செய்துகொள்ள முடிந்தது. இதன் எந்த பாகமும் உள்ளூரிலேயே பழுது பார்த்துக்கொள்ளக்கூடுமென்று சொல்லுவதால், கிராமத்திலுள்ள என்போன்ற விவசாயிகளுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகும். ஆகவே தமிழ்நாட்டு விவசாயிகள் இவ்வித கலப்பைகளை வாங்கி பயனடைவார்கள் என்று நம்பும்,

தங்கள் உண்மையுள்ள,
ராஜாராம்.

கிருஷிகன் ஆசிரியர் அவர்களுக்கு,

22 நெம்பர், சந்தாதார் து. சபாபதி எழுதிக்கொண்டது.

வணக்கம், தாங்கள் 'கிருஷிகன்' பங்குனி இதழில் குறிப்பிட்டிருந்தபடி என் கிணர் (சகாய தொகை) கடனை வஜா செய்யவேண்டுமென்று சர்க்காருக்கு மனு செய்துக்கொண்டேன். அதன்பேரில் விழுப்புரம் மகா-ா-ா-ஸ்ரீ லோன் தாசில்தார் அவர்கள் என்னுடைய கிணற்றை வந்து பார்த்து திருப்தியடைந்து பூருத் தொகையையும் வஜாசெய்ய சிபார்சு செய்வதாக சொல்லிப் போய் இருக்கிருர். மேற்கொண்டும் நான் கிணற்றை ஆழப்படுத்திக் கொண்டிருக்கிறேன். சர்க்கார் டிமாண்டு உத்திரவு வந்ததிலிருந்து செய்வது தெரியாமல் சஞ்சலப்பட்டுக்கொண்டு இருந்த எனக்கு தக்க சமயத்தில் ஆலோசனையும், உதவியும் அளித்த தங்களுக்கும், தங்கள் கிருஷிகனுக்கும் நன்றி செலுத்துவதுடன் தமிழ்நாட்டு விவசாயிகள் ஒவ்வொருவரும் "கிருஷிகனை" ஆதரிப்பது அவசியம் என விரும்புகிறேன். தாங்களும், கிருஷிகனும் தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு நீடூழிகாலம் சேவை செய்துவர விரும்பும்,

தங்கள் நன்றியுள்ள,
(ஒப்பம்.) D. சபாபதி.

கிருஷிகன் பத்திரிகையைப் படித்தவர்கள் கூறுவதை நீங்களும் படித்துப் பாருங்கள்

கிருஷிகனும் - நேயர்களும்

அவர்கள் சொன்னது:

கோவை விவசாயக்கல்லூரி உதவி ஆசிரியர் ஸ்ரீ குப்புமுத்து எழுதுகிறார்:—

"விவசாயிகளின் முன்னேற்றத்தில் தங்கள் ஊக்கமும் சலியாத உழைப்பும் தங்களை சரியான பாதையில் கொண்டு சென்றிருப்பதை அறிய மட்டிலாத மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் புதிய முயற்சியில் வெற்றியும், பத்திரிகை விருத்தியும் அடைய விரும்புகிறேன்".

"பங்குனி மாதத்திய கிருஷிகன் பத்திரிகையைப் பார்த்து சந்தோஷமடைந்தேன். எல்லோரும் பார்க்கவேண்டிய முக்கியமான பத்திரிகை என்பதில் சந்தேகமில்லை. இறைவன் அருள் புரிவாராக. தயவுசெய்து என் பெயரை ஒரு சந்தாதாரராக பதிவு செய்துகொண்டு ஒரு வருஷத்திற்கு கிருஷிகன் பத்திரிகையை அனுப்பிவரவும். சந்தா தொகை ரூ. (3—0—0) மூன்றும் மணியார்டர் மூலம் அனுப்பியிருக்கிறேன்".

M. கந்தசாமிப்பிள்ளை,
வேங்கடத்தானூர்.

"கிருஷிகன் என்ற பெயரால் வெளியிடும் தங்கள் பத்திரிகையை என் போன்ற எல்லாரும் விரும்பி ஏற்கவேண்டுமென்றும் அவையும் அவை சம்பந்தமான பிறவெளியீடுகளும் நீண்ட ஆயுளோடு நின்று நாட்டிற்கு தொண்டாற்ற இறைவன் அருள்புரியவேண்டும். தங்கள் முயற்சிக்கு நன்றி."

S. P. S. சுப்ரமணியம் செட்டியார்.

"மேன்மைபெற மலர்கள் அருள்க. விவசாயிகளுக்கு நல்லதொரு பொக்கிஷமிது."

B. S. மணி.

பண்படுத்தி பாதுகாத்தல் நன்றே என்ற
பண்டையர் நன்மொழியை மிகவும் காத்து
உண்பதற்கு நல்லுணவைத் தந்து மகிழும்
உயிர்கட்கோருயிராகும் உழவர்கட்கு
இன்பமுடன் நற்கருத்தாற் பண்படுத்த
இனியதொரு துணையாக கிருஷிகன்
பண்புடனே நாடுகின்றான் அவன்மொழியில்
பயிர்த்தொழிலின் வளங்காண்போம் வாய்மையுடன்

அன்னியூர் - மா. முருகனார்.

"மானிலமெங்கும் மாதந்தவராது மானிடர் செய்யவேண்டிய மாபெருங் கடமையாக பயிர்த்தொழிலை மதித்து செய்யவேண்டியதே. இத்தகைய பெருங்கருத்தை எத்தனை பத்திரிகைகள் எடுத்துரைத்தாலும் தகுமென்பதில் தடையில்லை. நல்லவேளைக்கறிகுறியாக பழைய கிருஷிகனை நினைவூட்டு முறையில் இப்புதிய 'கிருஷிகன்' தோன்றியிருக்கின்றது. நல்ல எடுப்பு அரிய ஆராய்ச்சி, பெரிய நோக்கம், கிராமத்துக்கொரு பண்ணைதிட்டம் போற்றத்தக்கது. 5000 ஆண்டுகளுக்கு முன்னிருந்த விவசாய குறிப்போடு ஆப்தர் நினைவுறுத்தும் வராஹ மிஹிரரின் 'நீர்த்தாழ்பாள்' செய்தி வரவேற்கத்தக்கது. கிருஷிகனைத் தமிழ்நாட்டுமக்கள் யாவரும் படித்து பயன்பெருமாறு கூறுவோம்".

—மாத சோதிடம்.

"இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுப் பஞ்சத்தைப்போக்க 'கிருஷிகன்' சிறந்த பணியாற்றுமென்று நம்புகிறோம்".

—தமிழகம்.

உணவு நெருக்கடி காலத்தில் விவசாய அபிவிருத்திக்காக சேவைபுரியும் கிருஷிகன் யாவராலும் வரவேற்கவேண்டிய பத்திரிகை.

—தினசரி.

பயிர்த்தொழில் வளர்ச்சிக்காகவும் விவசாயிகளுக்கு உதவி செய்வதற்காகவும் 'கிருஷிகன்' பத்திரிகை உதயமாகியுள்ளது இதில் உணவு உற்பத்தியைப் பெருக்க பல மார்க்கங்கள் காட்டப்பட்டிருக்கின்றன".

—தினத்தந்தி.

"விவசாயிகள் நலனுக்கான பல அரிய கட்டுரைகளும் குறிப்புக்களும் காணும் இந்த பத்திரிகையை வரவேற்கிறோம்."

—சுதேசமித்திரன்.

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே நாட்டின் உயிர்நாடி உணவே. இன்று உலகின் எப்பக்கத்திலும் உணவு பற்றுக்குறையே உளது. இத்தருணத்தில் பயிர்த்தொழிலை முன்னுக்கு கொண்டுவரக் கருதி "கிருஷிகன்" வெளிவந்தமை வரவேற்கத்தக்கதே. கிருஷிகர்களுக்கும் கிராமவாசிகளுக்கும் உபயோகமுள்ள மாத வெளியீடாகும்.

—"ஆத்மஜோதி". (இலங்கை)

விவசாய மக்களுக்கு பெரும் உபகாரியாக "கிருஷிகன்" மாத இதழாக வெளியிடப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு விதை, உரம் பயிர்த்தொழில் முறை இவைகளைப்பற்றி நன்கு விளக்குவதுடன், அவர்களுக்கு வேண்டிய நன்மையான முறைகளையும் சலுகைகளையும் விபரமாகவும் தெளிவாகவும் எடுத்துக்காட்டி விஷயங்களை வெளியிடப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு அரிய பொக்கிஷமாக விளங்குவான் என்று எண்ணுகிறோம்.

—சீர்திருத்தம்.

"கிருஷிகன் அனுபவரீதியில் விவசாயப்பண்ணை நடத்தி பிறருக்கு அறிவிக்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பத்திரிகை" விவசாயிகள் பருவ காலத்தில் அனுஷ்டித்து நற்பலன் அடையும் குறிப்புக்களுடன் வெளியிடப்படுகிறது.

—"விவசாயி"

"கிருஷிகன்" வார்த்தைப் போட்டி No. 2

முடிவு தேதி 20—8—51

முதல் பரிசு ரூ. 15 மதிப்புள்ள சபாஷ் கலப்பை

1. வெளி நாடுகளிலிருந்து இது ஏராளமாக வந்து கொண்டிருக்கிறது ...	— — —
2. நிலங்களை பண்படுத்த இது அவசியமானது ...	— — —
3 இதனால் ஏராளமான கால்நடைகள் சேதமாகின்றன ...	— — —
4. இந்த மரம் உரத்துக்கு தழை கொடுக்கும் ...	— — — —
5. இது கைத்தொழிலுக்கான (வர்த்தகப்) பயிராகும் ...	— — — —
6. இந்தக் கட்டணங்கள் இப்போது உயர்ந்திருக்கின்றன ...	— — —
7. உற்பத்தியை பெருக்க இது அவசியம் ...	— — — —
8. நெல் உற்பத்திச் செய்ய இது ஏராளமாக வேண்டும் ...	— — —
9. விவசாயக் கருவிகள் செய்ய இது வேண்டும்...	— — —
10. விவசாயிகள் இதைப்பற்றி அதிருப்தி அடைந்துள்ளார்கள் ...	— — — — —
11. விவசாய தமிழ் பத்திரிகைகளில் இதுவும்ஒன்று	— — — —

நான் பின்புறம் கண்ட நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொள்ளுகிறேன்.

பெயர்...சந்தா நெ.............

விலாசம்...

....

[நிபந்தனைகளுக்கு பின்புறம் பார்க்கவும்.]

கிருஷிகன் போட்டி நிபந்தனைகள்

1. இந்த போட்டிக்கு கட்டணம் கிடையாது.

2. இந்த புத்தகத்திலுள்ள அச்சுக்கூபனில்தான் எழுதவேண்டும்.

3. அடித்தல் திருத்தல்கள் இல்லாத கூபன்கள் தான் ஏற்றுக்கொள்ள முடியும்.

4. ஆசிரியரின் எழுத்துக்கு எழுத்து (11 விடைகளும்) சரியாக இருக்கும் விடைக்குத்தான் பரிசு கொடுக்கப்படும்.

5. ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் வந்தால் பரிசு தொகை ரூ. 15-ஐயும் பகிர்ந்து அந்த தொகைக்கு பொருமானமுள்ள கருவிகள் பரிசாக அளிக்கப்படும்.

6. பதில் தெரிய விரும்புவோர் பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

7. போட்டி சம்பந்தமாக ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

கிருஷிகன் போட்டி No. 1 சரியான விடைகள்

(1) பட்டினி, (2) உழவு, (3) கொளுஞ்சி, (4) மாடு, (5) பாம்பு, (6) மழை, (7) கோதுமை, (8) உரம், (9) பருத்தி, (10) எள்ளு, (11) உழைப்பு.

நக்கழகு ஆறு — உழவுக்கழகு ஏரு

ஆதலால்

நல்ல கால்நடைக் கருவிகளினால்
மலிவாக வேலை செய்யுங்கள்

வார்ப்படமல்லாத முழுதும் இரும்புத்
தகட்டில் செய்யப்பட்ட லேசான
சபாஷ் இரும்பு கலப்பைகள்.

TRY & HELP
GROW MORE FOOD
By
Using Improved Methods & Implements



Saving Time Labour & Money.

For your Self & your Nation

எஃகு கொழு முனையும், இரும்பு தகடு
இறக்கையும், வார்ப்பு அடிபாகமும்
கொண்ட ஜெய் ஹிந்து கலப்பைகள்.



உழுதல், கட்டி பெயர்த்தல், வாய்க்கால் போடுதல் முதலியன
செய்யும் UP 1 & 2 கலப்பைகள்

மற்றும்

காற்றுடி, விதைக்கலப்பை, பக்கட் கபிலை, மண்வாரி,
Cultivators முதலிய பலவிதமான கருவிகளுக்கு
எங்களிடம் விசாரிக்கவும்.

மானேஜர், பயிர்த்தொழில் பண்ணை.

Regd. No. M. 5790 April - May 1951

விவசாயியும் விவசாயமும் செழிக்க மண்ணரிப்பை தடுங்கள்

★ கரை கட்டுதல்

★ கால் வெட்டுதல்

★ சாலையாக பயிரிடுதல்

★ செடி கொடி வளர்த்தல்

★ வேலி உண்டாக்குதல்

ஆகியவைகளே

விவசாய வேலைகளை சிக்கனமாக, குறைந்த நேரத்தில் திறமையுடன் வேலை செய்யும் பலவித கருவிகள் ; மரம், செடி, கொடி, விதைகள் இவைகளின் தேவைக்கு எங்களிடம் விசாரிக்கவும்

★

மானேஜர்

" பயிர்த்தொழில் பண்ணை "

ஹனுமந்தபுரம் - அன்னியூர் P. O., - விழுப்புரம் S. I. R.

Edited & Published by A. S. Venkata Rao (Payirthozil Pannai)
Hanumanthapuram, Anniyur P. O., Villupuram S. I. R.
Printed at the Hanuman Printing Works, Villupuram.